# திராவிடநாடு

24-11-57 | வார வெளியீடு | விலை 16 காசு

## கூடிடுவாய்!

[தொல்காப்பியன்]

(எடுப்பு)

கூடிடுவாய்—தம்பி
கூடிடுவாய்!
பாடிடுவாய்—தமிழ்
பாடிடுவாய்!

(மேல் எடுப்பு)

ஆடும் மலரினைப் போன்றபெண்கள்—உடன்
ஆண்புலி அன்னவன் நீயுமிங்கு (கூடிடு)

(அமைதி)

நாடு பிரிப்பவர் நாத்திகராம்—சொந்த
நாடும், மொழியதும் வேற்றவரால்—மிகக்
கேடு அடைவதைக் கேட்டுவிட்டால்—சிறு
கீழ்மொழி சொல்லுவார் நாணிடவே (கூடிடு)

அன்பு வழியினைக் கொண்டவர்நாம்—கொலை
ஆயுதம் ஏந்தித் திரிவதில்லை—நீதி
வென்று நிலைத்திடும் நிச்சயமாய்—அதை
வேண்டிப் பணிசெயத் தென்னவனே (கூடிடு)

வாய்ப்பும் வசதியும் அற்றவர்! சாதாரணக் கொத்தனாரின் மகன்!! ஆயினும், தன் வாழ்க்கையைப் பொதுப் பணிக்கு அர்ப்பணித்ததோடு, ஏற்ற பணியினைச் செம்மையாகச் செய்ததால், நாட்டுக்கே தலைவரானார். ஏழை மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டதால், பலமுறை சிறைவாசமும், எண்ணற்ற தொல்லைகளையும் 'பரிசாகப்' பெற்றார். விடுதலை வீரர்களுக்கு இவையெல்லாம் நிலாச் சோறுதானே! எந்த அரசினர், அவருக்கு இதையெல்லாம் அளித்தனரோ; அதே அரசினர் இவருக்கு கைகட்டி நிற்கும் கட்டம், மலராமற் போகவில்லை. இவ்வளவு அரும்பாடுபட்டு, செக்கோஸ்லோவேக்கியாவில் சமதர்ம ஆட்சியை உருவாக்கி, 'ஜனாதிபதி'யாகவும் விளங்கி கடந்த 13-ந் தேதி, மறைந்துவிட்ட அவர் பெயர் **அன்டோனின் ஜபோடக்கி** என்பதாகும். 1953ல் ஜனாதிபதி கோட்வால்டு இறந்ததும், இவர் பொறுப்பேற்றார். சேவையின் மூலம், உயர்ந்த இவர் மறைவு கேட்டு, செக்கோஸ்லோவேக்கியா முழுதும் கண்ணீர் வடித்ததாம்.

*

டில்லியில், "ஐ. எல். ஓ." மாநாடு நடக்கிறதல்லவா? அதில் கலந்துகொண்ட சிங்கப்பூர் முதல் மந்திரி லிம் - யூ - காக் விசித்திரமான வேண்டுகோள் ஒன்று விடுத்தாராம். "செவ்வாய் கிரகத்துக்கு விரைவில் மனிதர்கள் போகலாமென்று, விஞ்ஞானம் சொல்லுகிறது. அங்கே, நிலம் ஒதுக்கிக் கொடுக்க சப்பானும், போய்ச் சேருவதற்கு ருசியாவும் உதவி செய்தால் தொல்லைப்படும் என் போன்ற முதல் மந்திரிகள் செவ்வாய்க் கிரகத்திற்கு ஓட முதலிடம் தேடிக்கொள்வோம்", என்று நகைச்சுவையுடன் குறிப்பிட்டாராம். நகைச்சுவையில் வேதனையும் கலந்திருக்கிறது! வேதனைக்குக் காரணம், சிங்கப்பூரில் பலதரப்பட்ட அரசியல் கட்சிகளாலும், அவருக்கு நல்லதோர் சூழ்நிலை இல்லாததே!!

*

அமெரிக்கா ஓராண்டுக்கு, இராணுவத்துக்காக எவ்வளவு செலவு செய்கிறது தெரியுமா?

## கேட்டீரா! சேதி!

3,800 கோடி டாலராம்! அதாவது சுமார் **பதினெட்டாயிரம் கோடி** ரூபாய்!! கோடி ரூபாயிருந்தாலே ஒருவனை, இங்கு கோடீசுவரன் ஆக்கி 'ஈசுவரனின்' இடத்தை அவனுக்கு அளிக்கிறார்கள். அமெரிக்கா ஒரு கோடி இரு கோடியோ, நூறு கோடியோ ஒரு ஆயிரம் கோடியோ அல்ல 18,000 கோடி ரூபாய் இராணுவத்துக்காக அழிக்கிறது! இது போதாதென்று அடுத்த ஆண்டுக்கு ரூ. 475 கோடி அதிகப்படுத்தியும் உள்ளதாம்!! இந்தப் பதினெட்டாயிரம் கோடியும் கிடைத்தால், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போடலாமே என்று பெருமூச்சு விடலாம், நேரு.

*

**சர்ப்பகந்தி** எனும் இந்திய மூலிகையை ஆராய்ச்சி செய்த இந்திய டாக்டருக்கு அமெரிக்கப் பரிசு கிடைத்திருக்கிறது! ஆல்பர்ட் லங்கர் என்பாரின் பெயரிலுள்ள, பரிசாகும் இது.

டாக்டர் ருஸ்தும் வக்கீல் என்ற பம்பாயைச் சேர்ந்த இந்த டாக்டர், சர்ப்பகந்தி மூலம் ரத்தக் கொதிப்பைக் குணப்படுத்தலாம் என்று கண்டுபிடித்துள்ளார்.

*

வெண்ணெய் திரளும்போது தாழி உடைந்ததுபோல, தான் கண்டுபிடித்த ஆராய்ச்சியொன்று வெற்றி பெற்றது என்று கேள்விப்படுவதற்கு முன் ஒரு மாது ரோம் நகரில் காலமாகியிருக்கிறார்! குஷ்ட நோயைத் தடுக்கும் புது மருந்தைக் கண்டுபிடித்தார் இவர். இந்நோய்க்கு, தெளிவான, நல்ல மருந்து இதுவரையிலும் கண்டுபிடிக்கப்பட்டது இல்லை. இந்தப் புதுக்கண்டுபிடிப்பிலீடுபட்டவர், **மேரிசூசேன்**, எனும் நர்சாகும். இவர் பீஜீதீவில் 20 ஆண்டுக்காலம் குஷ்ட நோயாளிகளின் காலனிகளில் சேவை செய்தார். இந்த நோய் தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்க பாரிசில், கடந்த நான்கு ஆண்டுகளாகச் சோதனை நடத்திவந்தார். இவரது சோதனை வெற்றிபெற்ற செய்தி வரும்போது, அவர் இல்லை—அவரது 'சடலம்'தான் இருந்தது.

*

விஞ்ஞானிகளுக்கென்று தனியாக ஒரு நகரம் அமைக்கப் போகிறதாம் ருசியா! மத்திய சைபீரியாவில் இதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, வேலைகள் செய்யப்பட்டு வருகிறதாம். அணு சக்தி, தானே இயங்கும் இயந்திர சாதனங்கள் ராக்கெட், போன்ற எல்லாவிதமான விஞ்ஞான ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டிருக்கும் இருபதினாயிரம்பேராசிரியர்களும், மாணவர்களும் இங்கு குடி அமர்த்தப்படுவராம்! இருபதினாயிரம் **பேராசிரியர்கள்** என்பதைக் கேட்கும்போது, 'ஏ அப்பா!!' என்று பெருமூச்சுவிடத் தோன்றுகிறதல்லவா?

*

இயந்திரங்களை இயக்கி மின்சாரம் உற்பத்தி செய்வதும், அருவிகள் மூலம் உண்டாக்குவதுமான முறைகள் தவிர்த்து, சூரிய ஒளியின் மூலமும் மின்சாரம் உற்பத்திசெய்யலாம் என்று ருசியாவில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறதாம். "புத்தியே சக்தி", ஏடு, வெளியிட்டுள்ள ஒரு செய்தியில், இந்த நூற்றாண்டுக்குள் பூமியின் பாதாளத்தில் உள்ள சூட்டையே மின்சாரம் தயாரிக்க மனிதன் பயன்படுத்துவான் என்று தெரிவிக்கிறது.

# சுய தேவை

[16] ஆண்டு சந்தா ரூ. 8 [24—11—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 19

அன்பைக் குழைத்து, மிகவும் உருக்கத்தோடு றிவிக்கிருர், நேரு பண்டிதர்! ஐந்தாண்டுத் திட் த்தின் பலன் காணீர், உணவுற்பத்தித் துறையில் ரம்பைவிட அதிகமாகப் பெற்றுவிட்டோம் என்று ர்ப்பரித்த காலம்போய், "ஐயகோ! இருள் தெரி றது, எதிரில். இருக்கிற உணவு போதுமோ, பாதாதோ என்கிற அச்சம் தென்படுகிறது. ந்நிய நாடுகளிடம் வாங்கலாமென்ருலோ, பணம் டையாது, நம்மிடம். ஆகவே கிராமவாசிகளே, ன் கையே தனக்குதவி என்கிற தாரக மந்திரத் தைக் கடைபிடிப்பீர்", என்று நாட்டுக்கு அறிவிக் ருர், அவர்!!

"கிராமவாசிகள் தங்களைத் தாங்களே நம்பி ருக்கவேண்டும். அவர்கள் திட்டக் கமிஷனே, ன்றி மத்திய அல்லது ராஜ்ய சர்க்காரோ தங்க ளுக்காக ஏதேனும் உதவி செய்ய வேண்டுமென திர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது." என்று ார்லிமெண்டில் 20ந் தேதி, விளக்கமாகத் தெரிவித் துள்ளார்.

மீண்டும், "சுயதேவைப் பூர்த்தி"யெனும் முரசு ட்டப்படுகிறது! இதற்காக, கிராமவாசிகள் எல் லாம், தன் கையே தனக்குதவி என்று பாடுபட வேண்டுமாம்—தேசம் அவர்கள் சேவையை எதிர் பார்க்கிறதாம்!!

நெருக்கடி நேர்ந்தபோது, கைகொடுக்க வேண்டி துும், அரசுக்கு உதவி புரிய வேண்டியதும் மக்க ளுடைய கடமைதான். ஆனல், மக்கள் இவர்களது த்தாப்புக்கும்' 'கவுரவத்துக்கும்' எத்தனைத் டவைகள் தான் பலியாவது.

பணமில்லை, என்கிற பஞ்சப் பாட்டு பாடுகிருர் களே, இந்த சர்க்கார் டில்லியில் பல லட்ச ரூபாய் ளைக் கொட்டி, 'அசோகா ஓட்டல்' என்று ஒரு டுதியைக் கட்டியிருக்கிருர்கள். மிகப் பெரிய ட்டல்! வெளிநாட்டு விருந்தினர்களுக்கென்று கலவிதமான வசதிகளும் நிரம்பிய ஓட்டல்!!

பணக் கவலை தெரிந்த சர்க்கார்; ஓட்டல் நடத்திக் டச் சம்பாதிக்கிறது என்று எண்ணலாம், பிறர். காங்கிரஸ் நண்பர்கள், தமது சர்க்காரின் கடமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும், இதனைச் சொல்லக் கூடும்.

ஆனல், அந்த ஓட்டல் தினசரி நஷ்டத்தில் வேலை செய்து வருகிறதாம்! இத்தகவலை, நாட்டுக்கு அளித்தவர் முன்னள் துணை நிதி மந்திரியாகயிருந்த யோகி என்பவர்!!

கடந்த பார்லிமெண்டு கூட்டத்தின்போது, கேள்வி கேட்டார், இவர். அதற்குப் பதிலளித்த, துணைநிதி மந்திரியான சந்தா, "முன்னள் துணை அமைச்சராகயிருந்த நீங்கள் இப்படிக் கேள்வி கேட் கலாமா?", என்று முகாரி எழுப்பிவிட்டு, "நஷ்டத் தில்தான் வேலை செய்கிறது", என்கிற தகவலையும் தந்தார்.

இதுபோல், ஏற்படும் நஷ்டங்கள் ஏராளம்! ஆனல், வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி, இவர்கள் ஆடம்பரத்துக்கு, மக்கள் அவதிப்பட வேண்டுமாம்!!

*

## குழப்பம்

ருசியாவுக்குக் கைகாட்டுகிருர், வி. கே. கே. மேனன்! அமெரிக்காவுக்குக் கைகாட்டுகிருர் டி. டி. கே!!

ஒருவர், ருசியாவைப் பாராட்டிப் பேசுகிருர். இன்னெருவர் அமெரிக்காவை, 'தஞ்சமென்று வந்தேன்' என்று துதிபாடுகிருர்.

இந்திய சர்க்காரின் கொள்கையோ, எப்பக்கத்திலும் சாராமல் நடுநிலைமை வகிப்பதென்பது. ஆனல், சர்க்காரில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களோ, நடுநிலையில் இல்லை. ஒருவர் 'லாலி'பாடுகிருர். இன்னெருவர் 'விட்டேனு, பார்' என்கிருர்.

ஆகவே, இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று டில்லி பார்லிமெண்டில், சில எதிர்க்கட்சி உறுப்பினர்களால் தீர்மானம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறதாம்.

காங்கிரஸ் அமைச்சர்கள், தமது சர்க்காரைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், எமது சர்க்கார் கூட்டுப் பொறுப்போடு இயங்குகிற சர்க்கார், எவர் என்ன சொன்னலும் அது மந்திரிசபை முழுவதையும் கட்டுப்படுத்துவதே யாகும், என்று சொல்லி வருகின்றனர்.

ஜனநாயகத்தில், ஆட்சியிலிருப்போருக்கு, கூட்டுப் பொறுப்புதான் உண்டு. அத்தகைய பொறுப்புடன் பணியாற்றும் மந்திரி சபையில் ஒருவர் ருசியாவை 'விரோதி' என்பதும், இன்னெருவர், 'ருசியா எமது நண்பன்! அமெரிக்காதான் ஒரு மாதிரி!!' என்று பேசுவதும், விந்தையானதாகும்,

அமெரிக்கா சென்றிருந்த டி. டி. கே. ருசியாவைப்பற்றி வழங்கிய கருத்துரைகள், இன்னும் காற்றேடு போய்விடவில்லை' நேரு, எப்படி பூசி

(15-ம் பக்கம் பார்க்க)

# "வாசுதேவ குடும்பம்"

"என்ன உலகம் போங்கள்! இன்றைக்கிருப்பாரை நாளைக்குக் காண்போம், என்கிற உறுதியில்லை. இந்த இலட்சணத்தில், 'உன்னை விட்டேனு, என்னை விட்டேனு' என்று ஓராயிரம் சண்டைகள். பக்கத்து வீட்டுக்குப் பக்கத்து வீடு சண்டை. நாட்டுக்கு நாடுசண்டை. இருக்கப்போவதோ கொஞ்ச நாட்கள்? அவைகளை, ஆனந்தமாகவும், பிறருக்கு உதவி செய்யும் வகையிலும் கழித்தால் என்ன?", என்று உருக்கமாகச் சொல்கிருர், உத்தமநாதர். அன்பும் கனிவும் வழிகிறது, அவருரையில். அவருடன் வீட்டுக்குச் செல்வோம். வாயிலில் கைகட்டி நிற்கிருன் பண்ணையாள், சின்னுன்! பக்கத்தில், தலையாரி சாரங்கன், நிற்கிருன்!!—இருவரும் வந்திருப்பது, கூலிக்கு. "ஆகா! என்னருமைப் பண்ணையாளே, எனக்காகப் பாடுபடும் தலையாரியே, வருக, அமருக", என்ரு சொல்லுவார், உத்தமநாதர். இவர்களைக் கண்டதும், "எலே! எங்கடா, வந்தீங்க?" குரலில் மிடுக்குத் தென்படுகிறது. கூலி, கேட்கிருர்கள், அவர்கள். "எலே! இப்படி தினை தினை ஏண்டா கூலி கூலின்னு உயிரை எடுக்கிறீங்க. நேற்றுத்தான் கொடுத்தேனே, போதாதா? ஊம்! இடம் கொடுத்தால், மடத்தையே பிடுங்கிவிடுவீர்களே", என்று உரத்த குரலையும், தடித்த வார்த்தைகளையும், வீசுகிருர். அங்கே, சாந்தமும் சமரசமும் பேசிய உத்தமநாதரா, இவர் என்று ஆச்சரியம் கிளம்பும் எவருக்கும். கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "ஐயா! சற்று நேரத்துக்கு முன்புதானே, சாவடியில் இன்றைக்கிருப்பாரை நாளைக்குக் காண்போம் என்கிற உறுதியில்லை என்று பிரலாபித்தீர்கள். இங்கு வந்ததும், இவர்களிடம் இப்படிப் பேசுகிறீர்களே?", என்று கேட்டுப் பாருங்கள். என்ன சொல்வார் பதில்? "சார்! நிசமா, எனக்கு இப்படியெல்லாம் அதட்டிமிரட்டணும்கிற ஆசையே கிடையாது. ஆனல், இப்படிச் செய்யாவிட்டால், இவர்கள் தலையின்மீது ஏறி உட்கார்ந்துகொள்வார்கள். என்ன செய்வது? அதனுல்தான் இப்படி நடக்கவேண்டியிருக்கிறது", என்று, சாவடியில் பேசியது போலவே, குரலில் சாந்தத்தையும் சமரசத்தையும் வரவழைத்துக்கொண்டு பேசுவார்.

*

இதுபோன்ற உத்தமநாதர்களுக்கு, நல்ல சவுக்கடி கொடுத்திருக்கிருர், நேரு பண்டிதர். டில்லியில் நடைபெற்ற அகில உலக மத மாநாட்டிற்குச் சென்று பேசுகையில், "உயர்ந்த இலட்சியங்களைப் பற்றிப் பலர் பேசுகிருர்கள். இப்படிப் பேசுகிறவர்களின் நடத்தையை நாம் கவனித்தால், வேடிக்கையாயிருக்கும். உபதேசம் உதட்டில்! உள்ளமோ நேர் எதிர்மாறு!! இப்படி, இரு மனேபாவத்துடன், வாழ்கிறேம். வாசுதேவ குடும்பம்—என்று வானளாவச் சொல்லி, பழைய ஏடுகளைப் புரட்டி விளக்குகிறேம். ஆனல், அப்படியா வாழ்கிறேம்?", என்று கேட்டிருக்கிருர். உள்ளமோ கள்ளர் குகை! உதடோ, தேன்கூடு!!—எனக்கொண்டு, ஊருக்கு உபதேசம் செய்யும், உத்தமநாதர்கள் ஏராளம். எல்லாத் துறையிலும், இவர்கள் இருக்கிருர்கள். அதிலும், ஆத்மீகத் துறையில் இவர்கள் செய்யும் உபதேசங்களின் அளவினை எடுத்தோத இயலாது. இங்குதான், பாருங்களேன்! காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியார், சென்னைக்குச் சென்று, தினசரி 'சத்கதாகாலட்சேபங்களை' செய்தவண்ணமிருக்கிருர்—இராமாயணத்திலுள்ள அருமை, தாயின் சொல் தட்டாத தன்மையும் இராமனின் கதாபாத்திரம் உலகுக்கு வழங்கும் அறிவுரை, 'உஷத்' காலத்தின் மகிமை, 'சந்தியாந்தனத்தின்' பெருமை, புராதன காலத்து ரிஷீசுவரர்களின்
மேன்மை, ஆகியவைகள் குறித்து
முழங்குகிருர். பட்டாடையும்
பீதாம்பரமும் அணிந்த பிரமுகர்
களும், 'பாண்டியாக்'காரும் 'பிளே
மத்' வண்டியும் ஏராளமாக்
குழுமுகின்றன; இந்துவும் மித்திர
னும் போட்டி போட்டுக்கொண்டு
பேச்சுகளை வெளியிடுகிறது
ஆனல், உபதேசம் செய்யும் அவ
ராலேயே, உபதேசப்படி நடக்க
முடிகிறதா? அவரது உபதேசங்
கேட்டு, 'ஆகா! ஆனந்தம், பரமா
னந்தம்,' என்று பரவச
மடையும் பக்தகோடிகளா
லாவது, நடக்க இயலுகிறதா
ஓய்வு நேரப் பொழுது போக்காக,
வக்கீல்களும், மேலதிகாரிகளும்
அவர்களது 'சகதர்மிணி'யரும்
வந்து செல்லுகின்றனரே ஒழிய
எவரும், கேட்டதைச் செயலாக்க
விரும்புவதில்லை, இதையே நேரு
இடித்துரைத்திருக்கிருர், "பழைய
கால ரிஷிகளைப்பற்றியும் முனிகளைப்பற்
நினைப்பதும், நாமெல்லாம் அவர்களது
வழிவந்தவர்கள் என்று பேசுவதும், நமக்
குப் பயன்படாது. ரிஷீசுவரர், முனீஸ்
வரர் என்பவர்களது சீடர்களில்கூட நல்ல
வர்களும் இருந்திருக்கிருர்கள் — கெட்ட
வர்களும் இருந்திருக்கிருர்கள், ஆகவே,
ரிஷிகளும் முனிகளும் எப்படியிருந்தார்
கள் என்பது அல்ல, இன்று நமக்குத்
தேவை. நீ, எப்படி இருக்கிருய்; உன்
மனச்சாட்சிப்படி நீ நேர்மையாக நடக்
கிருயா, என்பதுதான் இன்றுள்ள
கேள்வி" என்று கேட்டிருக்கிருர்.

வாசுதேவ குடும்பம், என்று
ஏடுகள் சொல்லுகின்றன. சங்க
ராச்சாரியார் போன்ற மதசீலர்
களும், வாசுதேவ குடும்பம் ஏற்
பட வேண்டும் என்று, காலேட்
சபங்களின்போது முழக்காமலிருப்
பதில்லை. ஆனல், மதமும் மார்க்க
மும், அதற்கு உறுதுணை செய்
கிறதா, என்பதுதான் உலக
மாநாட்டில் கூடிய மதத்தலைவர்
களை—அதிலும், இந்துமதத்
தலைவர்களைப் பார்த்து — நேரு
விடுத்த கேள்வி.

**உலகத்திலுள்ள எல்லா மக்களும் ஒரே குடும்பம் என்பதுதான், வாசுதேவ குடும்பம் என்பதற்குப் பொருளாம்.**

எல்லோரும் ஓர் குடும்பம்—
கேட்க இனிக்கிறது. ஆனல்

(14-ம் பக்கம் பார்க்க)

ஒரு நாடகம்

# நம்பிக்கை

மதனகோபால்

சிட்னஸ் நதியோரம். பல்லாயிரக் கணக்கான கூடாரங்கள் மத்தியில் ஒரு பெரிய கூடாரம் கம்பீரமாகத் தோற்றமளிக்கிறது. அதன் உச்சியில் கிரேக்கத்தின் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கிறது. அந்தக் கொடிதான் கிரேக்க மாவீரன், அகில உலகையும் ஆட்டிப்படைத்த தீரன், இரணகளச் சூரன் அலெக்சாண்டரின் கொடி! அவன் கூடாரத்தின் மீது பறக்கிறது, பளபளப்புடன்.

கூடாரத்தினுள் அலெக்சாண்டர் அழகுக் கட்டிலில் படுத்திருக்கிறான். அவனருகில் அவன் அருமை நண்பன் கிளீடஸ் நின்றிருக்கிறான். மற்றும் கிரேக்க மருத்துவர்களும், படைத்தளபதிகளும் ஆலோசகர்களும் இருக்கின்றனர். எல்லோர் முகத்திலும் சோகம் கப்பிக்கொண்டிருக்கிறது. கவலைதோய்ந்த முகத்துடன் நின்றிருக்கும் கிளீடஸ் தன் நண்பன் படும் வேதனையைப் பார்க்கச் சகிக்காமல் கண்களை மூடிக்கொள்கிறான்,

அலெக்:- கிளீடஸ்!

கிளீ:- என்ன வேந்தே!

அலெக்:- வலியால் வாடி வதங்கிச் சாகும் நிலையில் இருக்கிறேன் நான். நம் கிரேக்க வைத்தியர்களால் இவ்வியாதியைத் தீர்க்க முடியாதா?

கிளீ:- முயன்றார்கள் மன்னா. அன்று நீங்கள் கொடும் வெய்யிலினால் ஏற்பட்ட கடும் தாகத்தைத் தணிக்க ஓடும் சிட்னஸ் நதியின் நீரைப் பருகியிராதிருந்தால் இந்நோய் வந்திருக்காது. வேந்தே! இந்தப் புதுமையான கொடும் நோய் இந்த இடத்திற்கே உரியது என்றும், தீர்க்கும் வழி எது என்று புரியவில்லை என்றும் நம் மருத்துவர்கள் கூறுகிறார்கள். இந்த நோயைத் தீர்க்கக் கூடியவர்கள் பெர்சிய நாட்டு மருத்துவர்கள்தான். ஏனென்றால் இந்தப் பக்கத்திற்கே உரிய இந்த நோயைத் தீர்க்க அவர்களால்தான் முடியும். நம் மருத்துவர்களுக்கு இந்நோயின் குணமே தெரியவில்லை. ஆதலால் வேந்தே இந்நோயைத் தீர்ப்பதற்கு நாம் பெர்சிய நாட்டு மருத்துவர்களின் உதவியைத்தான் நாட வேண்டும்.

> உலகையே அதிரச் செய்த அலெக்சாண்டர், கிரேக்கத்திலிருந்து வட நாடுவரை வெற்றி கண்டு, மாவீரனானான். காரணம், அவனிடம் வீரத்தோடு நம்பிக்கையையும் கலந்திருந்ததுதான். அதை விளக்கும், இது.

அவன் கூற்றைத் ஆமோதிப்பது போல் அங்கேயிருந்த கிரேக்க மருத்துவர்கள் தலையசைத்தனர். ஆனால் கிளீடசின் பேச்சைக் கேட்ட கிரேக்கத் தளபதிசீறி எழுந்தான்.

கி. த:- என்ன சொன்னாய் கிளீடஸ். ஏற்றமிகு நம் அரசனின் நோயைத் தீர்க்க எதிரிகளின் மருத்துவர்களை வரவழைக்க வேண்டுமா? விசித்திரமாக இருக்கிறது. விந்தையாகத் தோன்றுகிறது! விபரீதத்தில்தான் முடியும் கிளீடஸ், உன் விந்தையான யோசனை. எண்ணிப் பார்த்துத்தான் கூறுகிறாயா? அல்லது வாயில் வந்ததை வெளியிடுகிறாயா?

கிளீ:- பதறுதீர் படைத் தளபதியாரே! வேறு வழியில்லை. ஏதேனும் தெரிந்தால் சொல்லும். நமது தலைவன் நோய் தீர்ந்து நல்லபடி வாழ வேண்டும் என்பதுதானே என் கருத்தும்.

கி. த:- எனக்கு பெர்சிய நாட்டு வைத்தியர்களின் நேர்மையிலும், நாணயத்திலும் நம்பிக்கையில்லை.

இவர்கள் உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்த அலெக்சாண்டர் மெல்ல சாய்ந்து உட்கார்ந்து கொண்டு பேச ஆரம்பித்தான்.

அலெக்:- கிளீடஸ்! பெர்சிய நாட்டின் பெயர்பெற்ற மருத்துவன் யாரென்று தெரியுமா?

கிளீ:- தெரிந்துகொண்டேன் மன்னா தொலைதூரப் பயணத்தின் மூலம். பிலிப் என்பவன்தான் பெர்சியத்தின் பெயர் பெற்ற மருத்துவன். அவன் டாரியஸ் மன்னனுக்குமருத்துவனாயிருந்தவனும். அவனால் உங்கள் நோய் தீரும் என்ற நம்பிக்கையிருக்கிறது. உத்தரவு கொடுங்கள்! ஓடோடிச் சென்று அழைத்து வருகிறேன் அவனை.

கிளீடசின் பேச்சைக் கேட்ட அலெக்சாண்டர் சிறிது நேரம் சிந்தித்தான். கூடாரத்தில் இருந்த பெரும்பாலான அதிகாரிகள் பரபரப்படைந்தனர். இந்த யோசனை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இதைக் கவனியாது அலெக்சாண்டர் கண்மூடிக்கொண்டிருந்தான். பின் பேசலானான்.

அலெக்:- கிளீடஸ்! அந்த பிலிப்பை உடனே அழைத்து வர ஏற்பாடு செய். ஏன் நீயே சென்று கூட்டிவா.

* * *

கூடாரங்களின் உள்ளே பல போர் வீரர்கள்,

ஒருவன்:- என்ன ரெமினோ, நீ இதைக் கேட்டாயா?

ரெமி:- எதை?

முதல்வன்:- அது தான் எதிரி முகாமைச் சேர்ந்த வைத்தியனை வரவழைப்பதை?

ரெமினோ:- இல்லையே, லூகாஸ்.

லூகஸ்:- நம் தலைவர்படும் வேதனையைக்காண சகியாமல் கிளேடசும் நம் மருத்துவர்களும் சேர்ந்து எதிரி முகாமைச் சேர்ந்த பிலிப் என்னும் பெயர்பெற்ற மருத்துவனை அழைத்துவர அனுமதி கேட்டனராம் அலெக்சாண்டரிடம். அவரே ஒப்புக்கொண்டு விட்டாராம். கிளேடஸ் போயிருக்கிறாராம், அவனை அழைத்து வர.

ரெமி:- எப்படி ஒப்பினார் நம் தலைவர். எதிரி நம் நோயைத் தீர்ப்பானா? மாறாகத் தீர்த்தல்லவா கட்டுவான், நம் தலைவருக்கு ஏதும் ஆபத்து வரக்கூடாதே?

* * *

அலெக்சாண்டர் கூடாரம். அலெக்சாண்டர், கிளேடஸ், பிலிப், படைத்தளபதி மற்றும் காவலர்கள், அலெக்சாண்டர் நோயின்உபாதை தாங்கமாட்டாமல் அலறிக் கொண்டிருக்கிறான். கிளேடஸ் அவன் அருகில் வந்து நின்று பேசுகிறான்.

கிளே:- வேந்தே! இதோ வைத்தியர் வந்திருக்கிறார்.

அலெக்:- பிலிபா! என் நோயைக் குணப்படுத்த முடியுமா?

பிலிப்:- பரிசோதித்துப் பார்க்காமல் ஏதும் கூற முடியாது மன்னா!

அலெக்:- சரி, என் உடலைப் பரிசோதித்துப் பார். நோயைக் குணமாக்க இயலுமா இயலாதா என்பதைக் கூறு,

அலெக்சாண்டரின் உடலை பிலிப் பரிசோதனை செய்தான். பல முறை பரிசோதித்து பின் சிந்தனை செய்கிறான். அவனையும், அவன் நடவடிக்கைகளையுமே கவனித்துக் கொண்டிருந்தனர் கிளேடசும், படைத் தளபதியும்.

அலெக்:- மருத்துவரே; நோயின் குணம் அறிந்தீரா? உம்மால் தீர்க்கக்கூடிய வியாதிதானா?

பிலிப்:- தீர்க்கக்கூடிய வியாதி தான் வேந்தே! ஆனால் நோய் மிகக்கொடியது. இப்பகுதிக்கே இந்த சிட்னஸ் நதி ஓரத்திற்கே உரித்தானது இவ்வியாதி. வியாதி பயங்கரமானதென்றாலும் இப்பகுதியிலே அடிக்கடி வரக் கூடியது, சாதாரணமானதே! எனவே பயப்படத் தேவையில்லை. இந்நதியோரத்திலேயே கிடைக்கக்கூடிய மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்தை உட்கொண்டால் நோய் பறந்துவிடும் பகலவனைக் கண்ட பனியைப்போல. உத்தரவாதம் அளிக்கிறேன் வேந்தே, நோய் குணமாவதற்கு.

அலெக்:- சரி பிலிப், மூலிகைகளைத் தேடிப் பிடித்து மருந்து செய்துக்கொண்டுவா, நாளை தானே வருகிறாய்.

பிலிப்:- சரி, வேந்தே!

அலெக்சாண்டர் கூடாரம், அலெக்சாண்டர், கிளேடஸ், படைத் தளபதி மற்றும் பலர். அலெக்சாண்டர் கண்களை மூடியபடி கட்டிலில் கிடந்தவாறு புரண்டு கொண்டிருக்கிறான்.

அப்பொழுது ஒரு தூதுவன் நுழைகின்றான். பின் அவனை அனுப்பிவிட்டு அலெக்சாண்டரிடம் பேசுகிறான்.

கிளே:- மன்னா! பார்மேனியாவின் தூதன் வந்திருக்கிறான்.

அலெக்:- என்ன?

கிளே:- இதோ இக் கடிதத்தை கொடுத்துவிட்டுச் சென்றான்.

"மனித வர்க்கம் எண்ணியது, செய்தது, பெற்றது, இருந்தது ஆகிய அனைத்தும் புத்தகப் பக்கங்களின் அற்புதப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றன."

—கார்லைல்

அலெக்:: பார்மேனீயோவினி
மிருந்தா? முக்கியமானதாக
தான் இருக்கவேண்டும். நீயே
படி.

[கிளேடஸ் படிக்கிறான்.

மதிப்பிற்குரிய வேந்தே!

வஞ்சக நெஞ்சம் கொண்ட
பிலிப்பை நம்பி வாழ்விழ
காதே! நான் பெற்ற செய்தி
படி பிலிப் உன் நோய் தீர்க்
மருந்து கொடுக்கப்போவ
தில்லை; டாரியசிடமிருந்
இலஞ்சம் வாங்கிக்கொண்டு
உனக்கு நஞ்சு கொடுத்துக்
கொல்லப்போகிறான். எச்ச
ரிக்கையாய் இரு! வஞ்சகன்
பிலிப் தரும் மருந்து உன்
உடலுக்குள் செல்வதற்குள்
இவ் வெச்சரிக்கை கடிதம்
உன் கைக்குச் சேரவேண்டும்

பார்மேனியோ

கடிதத்தைப் படித்துக்கொண்டு
வந்த கிளேடசின் முகம்
மாறுதலடைந்தது. அவன்
முகத்திலே கலவரக் குறி
தோன்றியது; படைத் தள
பதி பதறியெழுந்தான்
ஆனால், அலெக்சாண்டர்
அமைதியாக இருந்தான்.

அப்பொழுது பிலிப் மருந்துக்
கோப்பையுடன் உள்ளே
நுழைந்தான்.

பிலிப்:- வேந்தே! மருந்து இதோ

அலெக்சாண்டர் அவனையும்
மருந்துக் கோப்பையையும்
மாறி, மாறிப் பார்த்தான்
அலெக்சாண்டரின் பார்வை
பிலிப்பின் பார்வை மீது
பட்டுத் தெறித்தது. பிலிப்
பின் உள்ளத்தை ஊடுருவிப்
பாய்ந்து சென்றது அலெக்
சாண்டரின் பார்வை. ஏன்
அப்படி மன்னன் பார்க்கி
றான் என்று புரியவில்லை
பிலிப்பிற்கு.

கையைநீட்டி அலெக்சாண்டர்
கோப்பையை வாங்கினான்.
கோப்பையிலிருந்தமருந்தை
உற்று நோக்கினான். கையில்
இருந்த கடிதத்தையும் கவ
னித்தான். மறுபடியும்
பிலிப்பை உற்று நோக்கி
னான்.

பின் கோப்பையை தன் உதடுகளுக்கருகில் கொண்டு சென்றான். இமை கொட்டாது நோக்கிக்கொண்டிருந்த கிளைடஸ், மற்றும் பலரும் "நிறுத்துங்கள்" என்று கூவினர்.

அலெக்சாண்டர் அவர்களை சும்மாவிருக்கச் சொல்லி விட்டு மருந்தை அமைதியுடன் அருந்தினான். பின் பிலிப்பிடம் கடிதத்தையும் கோப்பையையும்நீட்டினான்.

கடிதத்தைப் படித்த பிலிப் கதறிக்கொண்டே மாவீரனின் கால்களைப் பற்றினான்.

பிலிப்:- மன்னர் மன்னா! மதிப்பிற்குரிய நண்பர்கள் தடுத்தும் கூட என் மருந்தை எப்படி அருந்தினீர்கள்?

அலெக்:- நம்பிக்கைதான் நல்லவனே! நாடு பிடிப்பதுதான் நோக்கமென்றாலும் நல்லவர்களின் நேர்மையிலும், நாணயத்திலும் நம்பிக்கை வைப்பவன் நான். நம்பிக்கையின்றேல் நானிலம் இல்லை. அன்னை, தந்தை, மகன், மகள், அண்ணன், தங்கை, நண்பன் இவர்களெல்லோரும் நம்பிக்கையில்லாவிட்டால் உலகில் இருக்க முடியாது. உன்னை முதலில் பார்த்த உடனே உன் நேர்மையை நம்பினேன்; நாணயத்தை நம்பினேன். மாறாக நீ நடந்திருந்தால் சரிதம் உன்னைத் தூற்றும். இப்பொழுது உன் பெயர் சரிதத்தில் இடம் பெற்றுவிட்டது. கிளைடஸ். பிலிப்பிற்கு வேண்டிய பொருள் கொடு. எல்லாக் கௌரவமும் அளி.

[அலெக்சாண்டரின் கூற்றைக் கேட்ட கிளைடஸ் அகமகிழ்கிறான். படைத் தலைவன் தலைகுனிகிறான். எல்லோரும் போகின்றனர்.]

★

**புதுவை தி. மு. கழக இட மாற்றம்**

திராவிட முன்னேற்ற கழகம்
நெ. 95, துய்ப்ளேக்ஸ் தெரு,
புதுச்சேரி

# "ஐ. எல். ஓ."

ஐ. எல். ஓ. என்று ஆங்கிலத்தில் சுருக்கமாக அழைக்கப்படும், அகில உலக தொழிலாளர் அமைப்பின் (International Labour Organisation) மாநாடு, இந்த கிழமை, டில்லியில் நடைபெறுகிறது.

இந்த அமைப்பில் 78-நாடுகள் இப்போது உள்ளன. பெரிய நாடுகள், சிறிய நாடுகள் எல்லாம் இந்த அமைப்பில் உள்ளன. இது, உண்மையிலேயே ஒரு உலக அமைப்பாகும். 1. சர்க்கார் 2. முதலாளிகள் 3. தொழிலாளர்கள் ஆகிய முத்தரப்பினரும்,இதில் கலந்து கொள்கிறார்கள். தான் செய்கிற முடிவை அமுலுக்குக் கொண்டுவர மற்றவர்களைக் கட்டுப்படுத்துகிற, அதிகாரம் இந்த அமைப்புக்கு இல்லை. சம்பந்தப்பட்ட தரப்பாரும், நாடுகளும் ஒருவருக்கொருவர் அவைகளை அமுல் செய்ய வந்தால்தான் உண்டு. ஆதலால், இதன் பொது குழுக்களிலும், கமிட்டிகளிலும், மூன்று தரப்புப் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். எல்லாப்பிரச்னைகளிலும், மூன்று தரப்பினரும் விவாதித்து, ஓட்டளிக்கும் உரிமை இருக்கிறது.

மனித குலத்தின் பாதுகாப்புக்கென்று ஐ. நா. சபை இருப்பது போல, அகில உலகத்திலும் உள்ளோரின் தொழில் சம்பந்தமானோர். நம் நிலையே, இந்த அமைப்பின் நோக்கம். 1946-ல் இந்த அமைப்பு ஐ. நா. சபையின் ஒரு பிரிவாக ஆக்கப்பட்டது.

*

முதலாவது உலகப் பெரும் போரின் முடிவில் வார்சேல்ஸ் ஒப்பந்தப்படி 1919-ல் இந்த அமைப்பு, உருவாயிற்று, உலகையே குட்டிச்சுவராக்கிய அந்தப் பெரும் போருக்குப்பின், சமூகநீதி இல்லாமல், உலக அமைதி ஏற்பட முடியாதென்று உணரப்பட்டது. அதன் விளைவாகவே, சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

இப்படியொரு அமைப்பு வேண்டுமென்பதை அதற்குமுன் பல்லாண்டுகளாகவே, தனிப்பட்டவர்களும், முற்போக்குக் கருத்துடையவர்களும் யோசித்து வந்தார்கள். துணி ஆலையில் சொற்ப சம்பளத்தில் பணி புரிந்து, பிறகு ஆலையரசராக மாறிய ராபர்ட் ஓவன் இதற்காகப் போராடிய ஆரம்ப வீரர்களில் ஒருவர். அந்தக்காலத்தில் தொழிற்சங்க இயக்கம் வளர்ச்சி பெற்று, தேசிய அடிப்படையில் இங்கிலாந்திலும் பிரான்சிலும் உருவாகி வந்தது. "ஒரு நாடு, மற்றொரு நாட்டின் முயற்சிகளைச் சிதறடித்து வருவதற்குப் பதிலாக சமூக சீர்திருத்தங்களில் நாடுகள் ஒன்றுபடட்டும்" என்று பலர், அப்போதே பேசினர்.

இதன் காரணமாகவும்,தொழிற்சங்க வளர்ச்சியாலும், தொழிலாளர் சட்டங்கள் இயற்றுவதற்கான சர்வதேச சங்கம் 1900ல் அரும்பிற்று. இச் சங்கத்தில் தீக்குச்சி தயாரிப்பில் வெள்ளை 'பாஸ்பரஸ்' கூடாதென்றும், பெண்களை இரவில் வேலைபார்க்கும்படி செய்யக்கூடாதென்றும் தடுப்பதற்கான, சர்வதேச ஒப்பந்தங்கள் வகுக்கப்பட்டன.

உலகப் போரின் முடிவில் சமாதான ஒப்பந்த நகலை வகுப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு, தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சம் சில உரிமைகளாவது அளிக்கும் உறுதி மொழியை பெறப் போராடிற்று. வேலை செய்வதற்கு உரிமை, சங்கம் சேர்வதற்கு உரிமை, வெளியிடங்களிலிருந்து தருவிக்கப்படுகிற தொழிலாளர்கள் சம்பந்தமாய் ஒழுங்குபாடு, சமூக இன்சூரன்ஸ், வேலை நேரம், தொழிலாளர் சுகாதாரப் பாதுகாப்பு, முதலியவை குறித்து ஓரளவு உறுதிமொழி அளிக்கப்பட வேண்டுமென்று அது தீர்மானித்தது. அதோடு, இது சம்பந்தமாக உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டின் தொழிலாளர் விபரங்களையும் சேகரித்தறிய சர்வதேச தொழிலாளர் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தவும், அக்குழு சிபார்சு செய்தது, அதன் பேரில் 1919ல் அகில உலகத் தொழிலாளர் அமைப்பு உருவாயிற்று.

இரண்டாவது உலகப்பெரும் போருக்குப்பின், ஐ. நா. சபையின் ஒரு முக்கிய அங்கம் போலவும் இந்த அமைப்பு, ஆக்கப்பட்டது.

*

அகில உலகத் தொழிலாளர் மாநாடு, நிர்வாகக் குழு, அகில உலகத்தொழிலாளர் காரியாலயம் —என்று, இந்த அமைப்பில், மூன்று பிரிவுகள் உண்டு. இந்த அமைப்பின் கொள்கையை வகுக்கிற பெரிய பீடம், அதன் மாநாடு தான். இதை ஒரு, உலகப் பார்லிமெண்டு எனவும் சொல்லலாம். சுமார் 80 நாடுகளைச் சேர்ந்த 700க்கு மேற்பட்ட பிரதிநிதிகள், ஆலோசகர்கள், பார்வையாளர்கள் இம் மாநாட்டில் கூடுகிறார்கள். இதுதான், சர்வதேச ஒப்பந்தங்களையும், சிபாரிசுகளையும் செய்யமுடியும். இங்கு செய்யப்படும் ஒப்பந்தங்களை, தத்தம் நாடுகளில்அமுலாக்கும் பொறுப்பு, கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்கு உண்டு. அவ்வப்போது, இந்த அமைப்பில் கலந்து கொள்ளும் அரசுகள், தாம்மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கைகள் அனுப்பவேண்டும்.

*

ஒவ்வோராண்டும் இம் மாநாடு கூடும். எல்லா நாடுகளையும் சேர்ந்த மூன்று தரப்புப் பிரதிநிதிகளும், கலந்து கொள்ளுவார்கள். அந்த ஆண்டின் நடவடிக்கைகளைபபற்றியும், அடுத்த ஆண்டின் வேலை முறைகளைப் பற்றியும் இம் மாநாடு முடிவுசெய்யும்.

இந்த அமைப்பின் நிர்வாகக் குழு, ஆண்டுக்கு நான்குதடவைக்குமேல் கூடும். அதில் 20-சர்க்கார் பிரதிநிதிகளும், 10-முதலாளிகள் பிரதிநிதிகளும், 10 தொழிலாளர் பிரதிநிதிகளும் இருப்பார்கள்.

இதன் காரியாலயத்தில் சுமார் 60-நாடுகளைச் சேர்ந்த 800-பேர்களுக்குமேல் வேலை பார்க்கிறார்கள்,

1950-க்குப் பிறகு ஐ. நா. தொழில் நுட்ப உதவித்திட்டத்தில், இந்த அமைப்பும் ஈடுபாடு கொண்டதிலிருந்து இதன் நடவடிக்கைகளுக்கு செல்வாக்கு அதிகமாயிற்று. முன்னேற்றமடையாத நாடுகளின் தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் பல பிரச்னைகளைத் தீர்க்க முயன்று வருகிறது.

சமூக நீதியே, இதன் மூல நோக்கம்! அதன் மூலம், உலக சமாதானம் தழைக்க வேண்டும் என்பதே, இதன் தாரக மந்திரம்!!

"ஓர் இடத்தில் வறுமையிருந்தாலும், அது எல்லா இடத்திலும் உள்ள வளத்தையும் கெடுக்கும்" என்பது இதன் இலட்சிய முழக்கமாகும். இதனாலேயே, தொழிலாளர் சட்டங்கள், பெண் தொழிலாளர்கள், இளம் தொழிலாளர்கள், தொழில் துறையில் பாட்டாளிகளின் நிரந்தர வேலை, உற்பத்திப் பெருக்கம், தொழிலாளர் பற்றிய புள்ளி விபரங்கள் ஆகியவைகளைக் கவனித்து வருகிறது.

★

# சிலையும், மனநிலையும்!

—[ஞேஞே]—

சிலையொன்று அமைக்கப்போகிறார்கள்! நூறு அடி உயரம் இருக்குமாம். அத்தனையும் 'எவர் சில்வரி'லாம்!!

ருசிய-அமெரிக்க விமானிகள் இருவர் கைகோர்த்து நிற்பது போல, இருக்குமாம் இச்சிலை. கிழக்கு, மேற்கு நாடுகளின் சமாதானச் சின்னமாக, இது விளங்குமாம்.

இச்சிலையை, மாஸ்கோவில் வைத்துக்கொள்வதா அல்லது ஐ. நா. சபைக்கு கொடுத்துவிடலாமா என்கிற ஆலோசனையிலிருக்கிறதாம், ருசிய அரசு.

இச்சிலையை செய்யப்போகிறவர் பெனியாமினோ புரோனோ எனும் அமெரிக்கச் சிற்பியாம். இச்சிலையைச் செய்ய அவர் எவ்வித ஊதியமும் எதிர்பார்க்கவில்லையாம்.

சிலையமைப்பது சரி! ஆனால் மனநிலை எப்படியிருக்கிறது, அமெரிக்காவுக்கு என்று பார்த்தால், வேதனையாகவே உள்ளது!!

விஞ்ஞான சாதனைகளை மெய்ப்பித்து, எவரையும் வெல்லும் திறமை எம்மிடம் அதிகம் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டு, '...எனினும் நாங்கள் சமாதானத்தையே நாடுகிறோம்', என்று ருசியா அறிவிக்கிறது.

அமெரிக்காவோ, 1000 மைல்கள் போய் தாக்கிடும் குண்டினைக் கண்டு பிடித்துவிட்டதாக அறிவிக்கிறது. இன்னும் ஒரு 500-கோடி ரூபா இந்தஆண்டில், ஆயுதபலத்துக்காகச் செலவழிக்கப்போவதாக அறிவிக்கிறது.

# எழுத்தாற்றல்

—[மலர்மன்னன்]—

"ஒரு நாட்டின் கவிதைகளை இயற்றும்அதிகாரம்மட்டும் என்னிடம்தரப் பட்டும். அந்த நாட்டினுடைய சட்டங்களை யார் இயற்றினாலும் கவலையில்லை; ஏன்றால் அந்த நாட்டை மாற்றியமைத்து விட முடியும்!" என்று ஆணவத்துடன் கூறிக்கொள்ளுகிறார், ஆண்ட்ரூஸ்பிளட்சர் என்பவர்.

எழுத்துக்களின் சக்தி மகத்தானது. சிந்தனையாளர்களின் உள்ளங்களிலே பிறந்து அவர்களது எழுதுகோல்களின் வழியாக உருவம் பெறுகின்ற கருத்துக்கள் மாபெரும் சாதனைகளைச் சாதித்திருக்கின்றன.

சாமானியனான ரூஸ்ஸோவின் எழுத்துக்களைக் கண்டு, பிரான்ஸ், ஜெனிவா போன்ற நாடுகளின் அரசுக் கட்டில்கள் நடுநடுங்கின. அந்தச் சிந்தனையாளனின் சீரிய நூலான 'சமுதாய ஒப்பந்தத்'தை நாற்சந்திகளிலும் நீதி மன்ற வாயில்களிலும் பகிரங்கமாகத் தீக்கிரையாக்கி அவை திருப்தியடைந்தன. ரூஸ்ஸோவின் எழுத்துக்கள் அன்று சாம்பலாக்கப்பட்டன.

அமெரிக்காவிலும் பிரான்சிலும் புரட்சிக்குப் பிறகு பிரகடனப் படுத்தப்பட்ட சுதந்திரச் சாசனங்களில் எல்லாம், 'சமுதாய ஒப்பந்தத்'தில்சிந்தனையாளன் ரூஸ்ஸோ எழுதியிருந்த சொற்றொடர்கள் பிரகாசித்துக்கொண்டிருந்தன!! அறிஞர் பெருமக்களின் வீடுகளிலெல்லாம் இன்றைக்கும் சிங்காரமாய் கொலுவிருக்கும் 'சமுதாய ஒப்பந்த'த்தைக் காணுந்தோறும், "அதிகாரத்தால் எழுப்பப்பட்ட அரண்மனைகளைக் காட்டிலும் சிந்தனையாளர்களால் எழுப்பப் பெற்ற நூற்களே நெடுங்காலம் நிலைத்து நிற்கும்" என்ற பிரான்சிஸ் பேகனின் பொன்மொழி நினைவிற்கு வருகிறதல்லவா?

எழுத்தாளர்களது படைப்புகள் சட்டங்களைக் காட்டிலும் உறுதி வாய்ந்தவை. இதனை அறிந்தே, "சட்டங்கள் சாகின்றன; ஆனால் இலக்கியங்கள் இறப்பதில்லை" என்று கூறுகிறார் லிட்டன் என்பாரும்.

எந்த நாட்டு வரலாற்றைப் பார்த்தாலும், ஏதேச்சாதிகார அரசுகள் எழுத்தாளர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியிருப்பதை அறிகிறோம். வில்லியம் பிளேக் என்ற அறிஞர், எழுத்தாளர்களின் கரங்களுக்குத் தடை விதிக்கும் ஏதேச்சாதிகாரப் போக்கினைக் கண்டிக்கையில், "எந்த நாட்டிலாவது கவிதைகளுக்குத் தடைபோட்டு விட்டார்களேயாயின், அந்த நாட்டினுடைய வளர்ச்சிக்கே அவர்கள் தடை விதித்து விட்டவர்களாவார்கள்" என்று எச்சரிக்கிறார்.

எழுத்தாளர்களின் எழுத்துக்களுடைய வளர்ச்சியைப் பொறுத்துத்தான் ஒரு நாட்டின் வளர்ச்சியும் ஏற்படுகிறது.

அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படைகளுடன் கோலாகலமாகக் கொலுவிருக்கும் அரசுகள், சாதாரண எழுதுகோலைக் கண்டு அஞ்சுகின்றன. 'மாபெரும் வைக்கோல் போரையும் சிறு நெருப்புப் பொறியொன்று அழித்து விடுவது போல் தம்மையும் அச்சிறிய எழுதுகோல் அழித்துவிடும்' என்று பயந்து, தமக்கிருக்கும் வலிமையை யெல்லாம் ஒன்று திரட்டி, அதனை நொறுக்கிவிட முயலுகின்றன. "ஆரிய மாயை"க்குத் தடைவிதித்ததும் இதனால் தானே!!

ஐரோப்பிய நாடுகளை ஒருகாலத்தில் நடுநடுங்கச் செய்த நெப்போலியன் கூடத் தன் கூர்வாளை உறையில் போட்டுவிட்டு எழுதுகோலுக்குத் தலைவணங்கி இருக்கிறானும்.

தூரத்தை ஊடுருவிக்கொண்டு குண்டுகள் பாய்வதைப் போன்றுதான், காலத்தை ஊடுருவிக் கொண்டு எழுத்துக்கள் பாய்கின்றன. அவை மக்கள் நெஞ்சங்களில் என்றைக்கும் அழுத்தமாகப் பதிந்துவிடுகின்றன என்பதை உணர்ந்துகொண்டமையால்தானோ, என்னவோ, "ஒரு கோபுரத்தைக் கட்டுவதைக் காட்டிலும் ஒரு கவிதை இயற்றுவதையே நான் விரும்புகிறேன். ஒரு அரண்மனையைக் கட்டுவதைவிட ஒரு நூலை இயற்றவே நான் விழைகிறேன்" என்கிறார், அலெக்சாண்டர் ஸ்மித் என்பவர். அவரே தான் வேறொரு இடத்தில், "ஒரு எழுத்தாளன் எதைச் சொல்லுகிறான் என்பதைவிட, எப்படிச் சொல்லுகிறான் என்பதே முக்கியம். எப்படிச் சொல்லுகிறான் என்பதைப் பொறுத்தே, அவனுடைய பெயரும் புகழும் நிலைநிறுத்தப்படும்" என்று எழுத்தாளனின் எழுத்துக்களுக்கு இலக்கணம் கூறுகிறார்.

எழுத்துக்களுக்கிருக்கும் ஆற்றலை நன்குணர்ந்தவரான எமிலி பவுல்சன், "புத்தகங்களா? அவை தான் அறிவுச் சுரங்கத்தின் திறவுகோல்கள். இன்பப் பூங்காவின் நுழைவு வாயில்கள்; முன்னேற்றப் பாதையின் வழிகாட்டிகள். அவற்றைப் படிப்போம், வாருங்கள்" என்று நம்மை நோக்கி அன்பழைப்பு விடுக்கிறார்,

இதையெல்லாம் அறிகையில் நம்மில் ஒவ்வொருவருக்கும், 'நாமும் ஓர் எழுத்தாளனாக வேண்டும்' என்னும் பேராவல் எழக்கூடும். எழுத்தாளனாவதென்பது எளிதல்ல. அது மிகக்கடினமான காரியமாகும். அப்படிஎழுத்தாளனாக ஆனாலும் அதைப் பிறர் ஒப்பச்செய்வது மிகமிகக்கடினம். இன்று ஒப்பற்ற நாடகாசிரியராகப் போற்றப்படும் மறைந்த மேதை பெர்னாட்ஷா, ஆரம்ப காலத்தில் தம் நாடகங்களை அச்சியந்திரத்தில் ஏற்றுவதற்காகப் பட்டபாடுகளைக் கேள்வியுற்றால், கண்களில் நீர் கசியும்.

"நான் எழுதும் நூற்களை வாசகர்கள் விரும்புகின்றனர். சில எழுத்தாளர்கள் விரும்புவதில்லை; அதனால் என்ன? நான் அளிக்கும் உணவை என்விருந்தாளிகள் பாராட்டினால் போதும். இதர சமையற்காரர்கள் பாராட்ட வேண்டுமென்பதில்லை!" என்று ஜான் ஹாரிடன் என்னும் எழுத்தாளர் கூறுகிறார்.

"எழுதுவதென்பது மிகமிக வசீகரமான தொழில்தான், அது உன்னைக் கூவிக்கூவி அழைக்கும். ஆனால் மிகமிக ஆபத்தான தொழில். எந்த நேரத்திலும் அது உன்னைக் கவிழ்த்துவிடும்!" என்று, மார்லிவைகௌன்ட் என்பார் எழுத்தாளராக விழைபவர்களுக்கு விடுக்கும் எச்சரிக்கையையும் நாம் மறந்துவிடக் கூடாது.

ஆர்வமும், அறிவும், பேனாவை சாக்கிரதையாக உபயோகிக்கும் தன்மையும் வேண்டும் எழுத்தாளர்களுக்கு.

அந்த எழுத்துக்கள், என்றும் சாகா! எப்போதும் மறையா!! ★

# “நாலுக்கு இரண்டு!”

எதிர்பார்த்தேன்! ஏமாந்தேன்!! —என்கிறார்.

வளர்ந்திடும் செலவுகளை வைத்து, நான்கு கோடி ரூபாய் கிடைக்குமென்று எதிர்பார்த்தேன்; இரண்டு கோடிதான் கிடைக்குமாம்—என்று சோகத்தோடு, தெரிவிக்கிறார்.

வேறு யாருமல்ல, அடிக்கடி எதிர்பார்த்து ஏமாறும் நமது நிதியமைச்சர் சுப்பிரமணியம்தான் இவ்வாறு, தெரிவிக்கிறார்.

சந்தானம் தலைமையில், அமைக்கப்பட்ட நிதிக் கமிஷன் மாநிலங்களுக்கும் மத்திய சர்க்காருக்கு மிடையில் எப்படி யெப்படி 'வரிப் பங்கீடு' இருக்கவேண்டும் என்று வரையறுத்து வெளியிட்டுள்ள அறிக்கையைப் பற்றியே, இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மத்திய சர்க்காரிடம் 'பிச்சை' கேட்கும் அளவுக்குத் திண்டாடும் மாகாணங்கள், அடிக்கடி எழுப்பி வரும், அபயக் குரல் கண்டு, அமைக்கப்பட்டதே, இக்கமிஷன்.

இது, இதுபோது வழங்கியிருக்கும் முடிவில் வருமான இனத்தில் **5 சத** விகிதம் மாகாணங்களுக்கு உயர்கிறது; தாவரப் பொருள்கள், தீப்பெட்டிகள், புகையிலை இம்மூன்று பொருள்கள் மீது விதிக்கப்படும் 'கலால்' வரியோடு கூட, காப்பி—தேயிலை—சர்க்கரை—கடுதாசி ஆகியவற்றின்மீது விதிக்கப்படும் வரி வருவாயையும் சேர்த்து மொத்த விகிதத்தில் **கால்** பங்கு, மாகாணங்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்பதும்; இரயில்வே கட்டணத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள புதிய வரியிலிருந்து (கவனியுங்கள்! மொத்த ரயில் வருமானத்திலிருந்தல்ல; புதிய வரியிலிருந்து!!) மொத்தத்தையும் மாநிலங்களுக்கு அளிக்கவேண்டும் என்பதும், கமிஷனின் சிபாரிசாகும்.

மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், மத்திய அரசுக்குச் செல்லும் வரிகளிலிருந்து, அதிகப் பணம் மாகாணங்களுக்கு அளிக்கும் திட்டம் என்றே இது தோன்றும்.

மாகாணங்களிடமெல்லாம், மத்திய அரசு எவ்வளவு நியாயத்துடன் நடந்துகொள்ளுகிறதென்றும், பேசப்படலாம்.

ஆனால், நமக்கு பிச்சை வழங்கும் கட்டத்தில்தான் டில்லி இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது! இவ்வளவு சலுகைகள் வழங்குவதுபோலத் தோன்றினாலும், நமக்கு இதன்மூலம் இரண்டே இரண்டு கோடிதான் **அதிகமாகக்** கிடைக்கும் என்பதையும் கவனத்தில் வைக்கவேண்டும்!!

பல இலாகாக்களிலும், ஐந்தாண்டுத் திட்டப்படி, வளர்கிற வேலை முறைகளைப் பார்த்தால், நான்கு கோடிக்குமேல் நமக்குத் தரலாம், என்கிறார், நிதியமைச்சர்.

இதை எதிர்பார்த்தேன்! ஏமாந்தேன்!!—எனவும், தெரிவிக்கிறார்.

ஏமாற்றம், எப்படிப்பட்டது என்பதை, இதோ 'மித்திரன்' தீட்டுகிறது:

“வருமான வரி வசூலில் முன்னணியிலுள்ள ராஜ்யங்கள் பம்பாய், மேற்கு வங்கம், சென்னை ஆகியவை. வசூலின் ஆதாரத்தின் பேரில் இவைகளுக்குக் கிடைத்துவந்த 20 சத விகிதம் இப்போது பாதியாகக் குறைக்கப்பட்டுவிட்டது. இந்த வெட்டு முக்கியமாகச் சென்னையைப் பாதிக்கக்கூடியது. பம்பாய், மேற்கு வங்காளம்போல் இங்கு தொழில் வளம் அதிகமில்லை. மேலும் மேற்கு வங்காளத்திற்கு, மத்திய சர்க்காரிடமிருந்து தனி உபகாரப் பணமாக 3½ கோடி ரூபாய் கிடைக்க இருக்கிறது. இந்த வகையில் மொத்தத்தில் மத்திய சர்க்கார் பல ராஜ்யங்களுக்கு 40 கோடி ரூபாய் கொடுக்கச் சிபாரிசு செய்திருக்கிறது. இந்த ராஜ்யங்களின் ஜாப்தாவில் மற்ற தென்னிந்திய ராஜ்யங்களைச் சேர்த்திருக்க சென்னையை மட்டும் ஒதுக்கியிருப்பது ஆச்சரியமாகும்”

ஆச்சரியமாகும்! — என்கிறது மித்திரன்.

ஏமாந்தேன்!!—என்கிறார், நிதியமைச்சர்.

**சென்னை மட்டும்**, புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, என்று சோகம் எழுப்புகிறது, மித்திரன்.

'தமிழ் நாடு' இதழ், இதுபற்றி பின்வருமாறு தீட்டுகிறது:-

எதிர்பார்த்ததற்கு மிகுதியாகச் சில மாகாணங்களுக்கு இந்தியப் பேரரசின் வருமானத்திலிருந்து அதிகப் பங்கீடு கிடைக்கும்படி நிதிக் குழு ஆலோசனை கூறியிருக்கிறது. ஆனால் **சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில்** குழுவின் ஆலோசனைகள் தேவைக்குத் தக்க உதவி அளிக்கும் தன்மையில் அமையாதது வருந்தத்தக்கதாகும். ஏனென்றால் மாகாணத்தின் இன்றியமையாத தேவையாகிய நான்கு கோடி ரூபாய் அளிப்பதற்கு மாறாக நிதிக் குழுவினரால் குறிப்பிடப்பட்ட ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாயே சென்னையின் புதிய பங்காகக் கிடைப்பதற்கு இந்திய அரசினர் ஏற்பாடு செய்வார்களென்று தெரிகிறது. இது ஓர் ஏமாற்றமாக முடிந்திருக்கிறது. என்று நிதி

அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

ஒழுங்கான தன்மையில் சீர்கேடுறுதவிதமாக நிதி வசதிகளை நிருவாகம் செய்யாமல் பொறுப்பற்ற போக்கில் சென்னை சென்றிருந்தால் இந்தியப் பேரரசின் வரித் தொகுதியில் அதிகமான பங்கு கிடைத்திருக்கும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இவ்விதமாகத் தாறுமாறான பொருளாதாரப் போக்கில் சென்ற மாகாணங்களுக்கு மிகுதியான பங்கீடு கிடைத்திருப்பதை அவர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியிருப்பது கவனிக்கத்தக்கது. இதைப் போலவே ஆந்திர மாகாணததின் நிதிஅமைச்சராகிய திரு. கோபால ரெட்டியும் தம்முடைய மாகாணத்திற்கு ஒதுக்கப்படும் பங்கீட்டைப் பற்றிக் குறைகூறியிருக்கிறார். ஆந்திர அரசு எதிர்பார்த்த அளவிற்கு இந்திய வரித் தொகுதிப் பங்கீடு அமையவில்லை என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இதற்குக் காரணம் ஆந்திர வருமானக் குறைவை நிறைவு செய்யும் அளவிற்கு மத்திய அரசின் பொருளுதவி துணை செய்யாததேயாகும். இதனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முழுதும் நிறைவேற்றுவதென்பது ஆந்திர அரசின் முன்னுள்ள கடினமான சிக்கலாகத் தொடர்ந்து நிற்கிறது என்று அவர் கூறியிருக்கிறார். சென்னை மாகாணத்திலும் இதே நிலைமைதான். எதிர்பார்த்த பங்கீடாகிய நான்கு கோடியில் இரண்டு கோடி மட்டும் கிடைத்திருக்கிறதென்றால் அதற்குத் தக்கவிதமாகத்தான் திட்டத்தின் ஆக்கவேலைகள் நடைபெறும் என்பதைக் கூறத் தேவையில்லை. தென்னிந்தியாவிலுள்ள மற்றொரு மாகாணத்திற்கும், தேவைக்குத் தக்க உதவி கிடைக்கவில்லை. கேரளத்தின் வருமானத்திற்கும், செலவிற்கும் இடையில் ஏறத்தாழ பதினொரு கோடி துண்டு விழுந்துள்ளபோது, அம்மாகாணத்திற்கு ஒன்றேமுக்கால் கோடி ரூபாய் மட்டும் நன்கொடை உதவி அளிப்பது மனநிறைவளிக்கத் தக்கதல்ல. தேவைகள் மிகுதியாகவுள்ள மாகாணங்களுக்கு அளிக்கும் நன்கொடை உதவிப் பட்டியலில் சென்னை மாகாணம் இடம்பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய மூன்று தென்னிந்திய மாகாணங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும்போது, சென்னை மட்டும் விலக்கப்பட்டிருப்பதற்குத் தக்க காரணம் இருப்பதாகப் புலப்படவில்லை."

நிதியமைச்சர் வெளியிட்ட ஒரு கூற்றை, தமிழ் நாடு, குறிப்பிட்டிருக்கிறது.

**நாமும் மற்றவர்களைப் போல, நிதி விஷயத்தில் பொறுப்பற்று நடந்திருந்தால், டில்லி உதவியிருக்கும்-என்கிறார், நிதியமைச்சர் சுப்பிரமணியம்.**

சென்னை, டில்லிக்குப் பயந்து, "இதைச் செய்யலாமா, அதைச் செய்யலாமா" என்று பயந்து பயந்து காரியங்களைச் செய்கிறது! அதனால், டில்லி, பட்டை நாமத்தைக் குழைத்துப் போடுகிறது!! ஏனைய மாகாணங்கள், இஷ்டம் போல் செலவழித்துவிட்டு, "எங்கே, பணம் கொடு!", என்று டில்லியை மிரட்டுகின்றன. டில்லி, தருகிறது அவைகளுக்கு.

நிதியமைச்சர் சுப்பிரமணியம் இதனை, வெளியிட்டுள்ளார் எனின் எவ்வளவு வேதனையிருக்க வேண்டும் அவர் மனதில்?

வங்கம், ஐக்கிய மாகாணம், மத்திய பிரதேசம், போன்றவைகளுக்கு' யோகம் அடிக்கிறது! நம் பூதிரிபாட்டும், கோபால ரெட்டியும், சுப்பிரமணியமும், குமுறுகிறார்கள்!! அதிலும் சுப்பிரமணியத்துக்கு நல்ல நாமமாகப் போடப்படுகிறது.

நாலு எதிர்பார்த்து இரண்டு பெறுவதும், முன்னூறு கோடி கேட்டு பாதிகூடக் கிடைக்காமல் திண்டாடுவதும், தமிழ் நாட்டுக்கே உரித்தான, புகழாகும்.

**இதனால்தான் நாம், நமது வரிகளும், அதன் மூலம் கிடைக்கும் வருமானங்களும், நமது மாகாணத்திலேயே வசூலிக்கப்பட்டு, இங்கேயே செலவழிக்கப்படும் தனியரசு வேண்டுமென்கிறோம்.**

அப்போது, மலையைக் கெல்லி எலி பிடிப்பதுபோல, அதில் 5 சதவிகிதம் உயர்வு, இதில் கால் பங்கு அதிகம் என்று 'கண் துடைக்கும்' கமிஷன்களை நியமிக்க வேண்டிய அவசியத்தில், டில்லியும் இருக்காது. நாலு எதிர்பார்க்கும் நாமும் நாற்பதுக்கு மேல் பெற்று வாழும் வழியும் கிடைக்கும்.

தாம் செலுத்தும் வரி இனங்கள் டில்லிக்கு அதிகம் என்கிற குரல், ஒவ்வொரு இடத்திலும், இல்லாமலில்லை. அதன் விளைவாக, ஒரு கண் துடைப்புச் செய்கையே, இக்கமிஷனின் அறிக்கையாகும்.

சொந்த நிலத்தை மாற்றானுக்கு 'தானம்' அளித்துவிட்டு, மடியேந்தி 'இரண்டு படி நெல் கொடு! நாலு படி கொடு !!', என்று கேட்பது, விவேகமற்றதுமட்டுமல்ல; வேதனையானதும்கூட.

இதனால்தான், நாம் தனியரசு கேட்கிறோம் — அப்போது, எதிர்பார்க்கவேண்டிய அவசியமோ, ஏமாற்றமடைய வேண்டிய கட்டமோ, ஆச்சரியப்பட வேண்டிய நிலைமையோ, நிச்சயம் எவருக்கும் உருவாகாதே !!

★

★

"புத்தகங்களை இரவல் கொடுக்காதீர்கள். எனது புத்தக சாலையில் இருக்கும் புத்தகங்கள் அனைத்தும் இரவல் வாங்கியவைகளே."

—பெர்னட் ஷா

*

"நூல்நிலையம்(புத்தக நிலையம்) இல்லாத ஊரும் ஒரு ஊரா?"

—லெனின்

★

# உள்ளத்து உயர்வு

[கோ. கருணாநிதி]

மற்ற மற்ற உயிர்ப் பிராணிகளிடம் இல்லாத ஒரு தனிச்சிறப்பு மனிதனிடத்தே பொதிந்துள்ளது 'உள்ளம்' என்று மனிதனுக்கு மட்டுமே உரித்தானதாய் இருக்கிறது; எதையும் பகுத்துணரும் ஆற்றல் சில பிராணிகளுக்கும்—மனிதனைப்போலவே — இருப்பதாக ஆராச்சியாளர்கள் கூறுகிறார்கள்! பிறகு எந்த வகையில் மனிதன் விலங்கின்று வேறுபட்டவனாகக் காட்சியளிக்கிறான்? 'உள்ளம்' என்ற ஒன்று மனிதனுக்கு மட்டுமே இருப்பதாலும் அது மனிதனைத் தவிர மற்றைய உயிர்ப் பிராணிகளிடம் இல்லாததாலுமேதான் மனிதன் விலங்கினின்றும் வேறுபட்டவன், உயர்ந்தவன் என்று போற்றப் படுகின்றான்.

உணரும் ஆற்றல் அவனிடத்தே இருக்கும் உள்ளத்தால் அமைகிறது. அத்தகைய உள்ளத்தின் சிறப்பு எல்லோருக்கும் ஒரே மாதிரியாய் அமைவது இல்லை; பலருக்கு பல்வேறு கோணத்தில் நின்று செயலாற்றும் தன்மையுடையதாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட உள்ளங்களின் வேறுபாட்டை, அவற்றின் தன்மையை தமிழ்ப் பெரியார் வள்ளுவப் பெருந்தகை வெகு அழகாக படம் பிடித்துக் காட்டுகிறார்.

**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனைய துயர்வு**

அகநானூறு போன்ற உயர்ந்த நூல்கள் இருக்கும்போது மதன காமராஜன் லீலை போன்ற நூல்களில் ஏன் உள்ளத்தைச் செலுத்த வேண்டும்! அது அந்த. உள்ளத் தன்மை! அந்த உள்ளம் அவ்வளவுதான் உயர்ந்திருக்கிறது. ஆனால் அகநானூறு போன்றவைதான் சிறப்பான நூல்கள் என்று அவற்றின் பால் மனதை ஈடுபடுத்திப் பெருமை அடைகின்றது வேறொரு உள்ளம்! அது அந்த உள்ளத்தின் உயர்வைக் காட்டுகிறது; நீரின் மட்டம் உயர உயர தன்னையும் உயர்த்திக் கொள்கிறதே தாமரை மலர்! அதேபோன்றது.

நீரின் மட்டம் உயர்ந்தால் தாமரையின் தண்டும் உயர்ந்து நீருக்குமேல் மலரை மலரச் செய்து மகிழும்! நீரின் மட்டம் தாழ்ந்தால் தாமரையின் உயரமும் தாழ்ந்து போகும்! உள்ளம் உயர்வடைய மனிதனுடைய வாழ்வும் உயர்வடையும், உள்ளம் தாழ்ந்தால் வாழ்வும் தாழ்வடைகிறது. பண்பாடு அழிகின்றது.

உள்ளத்தின் இந்தத் தன்மையை வள்ளுவர் 'ஊக்கமுடைமை' என்னும் அதிகாரத்தில் கொண்டு வந்து புகுத்தியிருக்கிறாரே! அது ஏன்? ஆராய வேண்டிய கருத்து இது.

ஊக்கமுடைமைஎன்றால்எடுத்த செயலை வெற்றியுடன் செய்து முடித்தல் என்பது பொருள். 'எடுத்துக்கொண்ட எந்தச் செயலையும் வெற்றியுடன் செய்து முடி என்று சொல்ல வேண்டிய இந்த அதிகாரத்தில் உள்ளத்தின் தன்மையை ஏன் புகுத்தினார்? இங்குதான் வள்ளுவப் பெருந்தகையின் ஆற்றலை, பண்பட்ட இதயத்தின் பேரொளியைக் கண்டு நாம் வியப்படைகிறோம்.

உலகில் வாழும் மக்களின் உள்ளங்கள் ஒரே மாதிரியாய் செயலாற்றுவதில்லை; ஒவ்வொருவருடைய மனமும் ஒவ்வொரு கோணத்தில் நின்று பணிபுரிகிறது; ஒரே தாயின் வயிற்றில் பிறந்து வளர்ந்த இருவரில் ஒருவன் உயர்ந்த குணமும், மற்றவன் குடிகெடுத்து தான் மட்டும் வாழும் மனப் பண்பும் வாய்ந்தவர்களாக வாழ்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் உள்ள மாந்தரைப் பார்த்தார் வள்ளுவர். காடு கெடுத்து வயலாக்கி வளமாக்கி நாடு திருத்திய உத்தமர்களையும் :பார்த்தார்! வளமோடு வாழ்ந்த நாட்டைக் கொள்ளை அடித்தும், காட்டிக் கொடுத்தும் வாழ்ந்த குள்ள நரி உள்ளம் படைத்தவர்களையும் பார்த்தார். இருசார்பாரும் மனிதரே! இருவரும் தம் தம் செயலால் திறமையோடு செயலாற்றும் மனத் துணிவு கொண்டோரே! ஆனால் அவருடைய எண்ணமோ நல்ல செயல்களைச் செய்யத் துணிபவர்களை மட்டுமே 'ஊக்கத்தைக் கைவிடாது செயலாற்றுங்கள்! உயர்வடைவீர்கள்' என்று எடுத்தியம்பவேண்டும் என்பது! அதை எப்படி இயம்புவது? நல்லவர்களை மட்டும் சொல்லாட்டில் மற்றவர்களை அவரைத் தூற்றவல்லவோ செய்வார்கள்! எவருடைய தூற்றலையும் ஏற்க விரும்பாத இதயம் அவருடையது. ஆகவே சிந்தித்தார் பிறகு இருவருக்குமே பொதுவான ஒரு குறளை வடித்தெடுக்கிறார்.

எடுத்த செயலை வெற்றியுடன் செய்ய முனையுங்கள்! ஆனால் அந்தச் செயலின் தன்மை எத்தகைத்தாய் இருக்கும் தெரியுமா? அது செய்கின்றவர்களின் உள்ளப் பாங்கைப் பொறுத்துத்தான் இருக்கும். உயர்ந்த உள்ளத்தோடு உயர்ந்த செயலைச் செய்தால் உயர்வடையலாம். அது நீர் உயர மலரும் உயரும் தன்மையைப் போன்றதாய் இருக்கும்! ஆனால் தாழ்ந்த உள்ளத்தோடு செயலாற்றினால் அந்தச் செயல் என்னவாகும்? அதுபற்றி இனி ஏன் இயம்பவேண்டும்!

வள்ளுவப் பெருந்தகையின் உள்ளம் மிகப் பரந்த மேம்பாடான தன்மையாய் இருந்திருக்கும் என்பதற்கு இந்தக் குறள் ஒன்றே சான்றாகும். இதே போன்று 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் அமைந்துள்ள ஒரு குறள் அவருடைய மேம்பாடான உள்ளத்திற்கு உறைகல்லாக அமைந்திருக்கிறது.

எது அறிவு? வள்ளுவர் கூறுகிறார்:

எவ்வதுறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

அறிவுடையோர் என்று யார் புகழப்படுகிறார்கள்! 'அல்லி அரசாணி' மாலையை அடிவிடாமல் பாராது ஒப்பித்துவிடும் ஆற்றல் மிக்குடையோரா? ஆண்டவன் மேல் ஆயிரம் பாக்களை பிழை இல்லாது இயற்றிவிடும் கல்வித் திறம் உடையோரா? இல்லை! பிறகு யார்? உலகம் எந்தப் புது வழியில் சென்று கொண்டிருக்கிறதோ அதன்படியே தம் கருத்தையும் மாற்றிக்கொண்டு வாழ்பவர்கள் தாம் அறிவுடையவர்கள்.

உலகம் தட்டை என்று புராணம் கூறியது தவறு! உலகம் உருண்டை என்று அறிவியல் உலகம் செப்புகிறது என்றால் உலகம் தட்டை என்று புராணம் செப்பியதை விட்டு விட்டு உருண்டைதான் என்று சொல்லவேண்டும்! அதுதான் அறிவு! பழமையை, அதனிடத்தே உள்ள சில மூடப் பழக்க வழக்கங்களை விட்டொழித்து புதுமையானவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப் பண்பு வளரவேண்டும்! பழமைதான் சிறப்புடைத்து என்று செப்பிய காலம் வேறு! ஆனால் புதுமை வேண்டும் என்று சொல்லுகின்ற காலம் வேறு! உலகம் புதுமையை நாடிச் செல்லும்போது நாமும் புதுமையை நாடுவதுதான் சிறந்த அறிவுடைமை!

சாதிப் பாகுபாடுகள் புதுமை பூத்துக் குலுங்கும் இந்தக் காலத்தில் தேவை இல்லாத ஒன்று! சாதிப் பிரிவினை அடியோடு ஒழிய வேண்டும் என்றுதான் இன்றைய உலகம் விரும்புகிறது! ஆனால் அறிவுடையோர் எனப்பட்டோர் இந்தக் கருத்தை ஏற்க மறுப்பதேன்? சேரியில் வாழ்பவனை தம்முடைய தெருவில் நடமாடக் கூடாது என்று சட்டம் இயற்றியவர்களும் அறிவுடையோராகத்தான் இருந்திருக்கின்றனர். தமக்கு முன்னால் அவர்கள் செருப்புக்கூட போட்டுக்கொண்டு போகக்கூடாது என்று அதிகாரக் கொடியை தூக்கிப் பிடித்தவர்களையும் அறிவுடையோர் என்றுதான் சொல்லுகின்றனர். இவர்களையெல்லாம் அறிவுடையோர் என்று உலகம் ஏற்றுக்கொள்ளாது! காரணம் அவர்கள் உலகத்தின் போக்குக்குத் தகுந்தவாறு தம் கருத்தை மாற்றிக்கொண்டு வாழத் தகுதி இல்லாதவர்கள். அப்படிப்பட்டோர் குறள் வழி வந்த சட்டத்தின்படி அறிவுடையோர் அல்ல! உலகு நல்ல 'து என்று எதை எடுத்து இயம்புகிறதோ அதை, அதற்கு ஏற்றவாறு தம் கருத்தையும் மாற்றிக் கொள்ளவேண்டும். அதுதான் அறிவுடையாரின் பண்பாகும்! இப்படிப்பட்ட நல்ல பண்பாடு எப்படி வரும்? கூர்மையான அறிவினலா? அல்ல; நல்ல உள்ளத்தால்தான்! புதுமைக் கருத்துக்களை உள்ளம் ஏற்க வேண்டுமானால் முதலில் உள்ளம் பக்குவப்படவேண்டும்; காலத்திற்குத் தக்கவாறு, உலகின் போக்குக்குத் தகுந்தவாறு தாமும் தம் கொள்கையை மாற்றி அமைத்துக்கொள்ளும் உள்ளம் வேண்டும்; யாதும் ஊரே! யாவரும் கேளிர்! என்று எண்ணும் பரந்த உள்ளம் வேண்டும்.

'யாவரும் கேளிர்' என்ற பரந்த உள்ளம் நம்முடையது என்றால் அதற்காக நம்மைக் கெடுத்து பிறர் மட்டும் வாழ எத்தனிப்போரை விட்டுவைக்கக்கூடாது. 'யாதும் ஊரே' என்பதற்காக நம் நாட்டை அடிமையாக்கிவிட்டு எங்கோ யாருடனோ இருந்து வாழவும் உள்ளம் மாறுபடக்கூடாது. 'யாதும் ஊரே' என்றால் எம் நாடு வாழவேண்டும்! பிற நாடும் வாழ வேண்டும்! என்பதுவே! 'யாவரும் கேளிர்' என்றால் எம் இனத்தவர் சிறப்புடன் வாழவேண்டும்! பிற இனத்தவரும் சிறப்போடு வாழ வேண்டும். இதுதான் பண்டமிழ் நாட்டாரின் பரந்த உள்ளத்தின் பிரதிபலிப்பு. இத்தகைய உள்ளப் பாங்கை வளர்க்கவேண்டுமானால் அதற்கும் வள்ளுவர் வழி வகுத்துக் கொடுக்கிறார்.

உள்ளுவ தெல்லாம் உயர் வுள்ளல்
மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

நல்ல செயலையும் நல்ல பண்பாட்டையும் வளர்க்க வேண்டுமானால் எப்பொழுதும் உயர்ந்த குறிக்கோள்களையே மனத்தில் கொள்ள வேண்டும். மற்றைய கீழான உணர்வுகளை மறந்தும் நினைத்தல் கூடாது. ஏனெனில் அவைதாள் மனித உள்ளத்திலேயே என்றும் நிலைபெற்றிருப்பதாயிற்றே! பிறகு ஏன் அவற்றைப்பற்றி எண்ண வேண்டும்! அவை நீத்து உயர்ந்த எண்ணங்களை உன்னுவதுதான் காலச் சிறந்ததாகும். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் பெறும் ஆற்றலை நாம் பெற்றுவிட்டால் நாட்டில் நலம் பெருகும்! வளம் கொழிக்கும்!

★

செயற்கைச் சந்திரனை ஆகாயத்துக்கு அனுப்பிய ருசியா, செயற்கைச் சூரியன் ஒன்றைத் தயாரிப்பதிலும் கவனம் செலுத்திக்கொண்டுள்ளதாம்! "புதியே சக்தி", என்கிற ருசிய இதழில் இத்தகவல் காணப்படுகிறது. சூரியனிலிருந்து வரும் ஒளி, வினாடி ஒன்றுக்கு 1,86,000 மைல் வேகம் கொண்டதென்று விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளார்கள். இதே வேகத்தில் 'ராக்கெட்' ஒன்றைத் தயாரித்து அனுப்பினால், சூரிய மண்டலத்துக்குச் செயற்கைச் சூரியனை அனுப்ப முடியும் என்று கருதப்படுகிறது. சூரிய மண்டலத்துச்குப் போக வேண்டுமானால், முதலில் வான மண்டலத்தையும் பிறகு சந்திர மண்டலத்தையும் தாண்டிச் செல்ல வேண்டும்.

●

செயற்கைச் சந்திரன் முடிந்து செயற்கைச் சூரியன் பற்றிய செய்திகள் வரும் இச்சமயத்தில் ருசியாவிலிருந்து இன்னொரு 'அதிசயச் செய்தி'யும் கிடைக்கிறது. தென்கிழக்கு கசக்ஸ்தானில், செயற்கைக் கடல் ஒன்று ஏற்படுத்தும் வேலை, இப்போதுதான் முடிந்ததாம். புக்தார்மா, என்கிற பெயருள்ள இக்கடலின் நீளம் 373 மைல். இக்கடலில், அடுத்த ஆண்டில் தண்ணீர் நிரப்பப்படுமாம். கடலில் தண்ணீர் விட்ட பிறகு, சீனவிலிருந்து, வடதுருவ மண்டலத்திலுள்ள காராகடல் வரை நேராகக் கப்பல் போக்குவரத்துக்கு வழி ஏற்படுமாம்.

●

4-ம் பக்கத் தொடர்ச்சி

நடைமுறையில், ஏது வழி அதற்கு? எங்கு பார்த்திடினும், சண்டையும் பூசல்களும்தான், தென்படுகின்றன.

உலகம், ஓர் குடும்பமாவது' பிறகு இருக்கட்டும்! முதலில், வாசுதேவ குடும்பம் பற்றிப் பேசிடும் இந்துமத அதிபர்கள், இந்து மதத்துக்குள்ளேயே, 'எல்லோரும் ஓர்நிறை' என்பதை ஏற்றுக் கொள்கிறார்களா? இருந்தால், சங்கராச்சாரியார், பார்ப்பனர்களுக்கு மட்டும் தனிச் சலுகையும் ஏனையோரை 'இரண்டாந்தரம், மூன்றுந்தரமாகவும்' நடத்த எண்ணுவாரா! இப்போது, திருவையாறு போன்ற இடங்களிலுள்ள ஆலயங்களில் கீழ் குலத்தவர் என்பவர்களை நுழைய அனுமதி மறுப்பார்களா! சிவம்—விட்டுணு, என்று பிரித்துக் கொண்டு, சண்டை போடுவார்களா? வடகலை, தென்கலை என்று ஒரே பிரிவுக்குள்ளும் வேற்றுமைகளை வளர்த்துக்கொண்டு, காஞ்சி போன்ற இடங்களில் ஆண்டு தோறும் நடைபெறும் உற்சவங்களில், அடிதடி நடாத்துவார்களா?

வாசுதேவ குடும்பம், என்பது ஏட்டில்! பேச்சில்!! ஆனால் நடத்தையில் யார் இதைப்பற்றிப் பேசுகிறார்களோ, உபன்யாசம் செய்கிறார்களோ, அவர்களே மீறுகிறார்கள், சந்தர்ப்பம் கிடைக்கும் போது மட்டும், உத்தமநாதர்களாக, கனிவும் அன்பும் ததும்ப உபதேசம் செய்கிறார்கள்.

"இந்து மதத்துக்குள் எத்தனை பிரிவுகளிலிருந்தாலென்ன! ஒரு குளம் இருக்கிறது. அதற்கு வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் படித்துறைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், எந்தப் படித்துறைகளின் வழியாகப் போனாலும் கடைசியில் தண்ணீரில்தானே கொண்டு போய்விடுகிறது. அதைப்போலத் தான், சிவம், வைணவம் என்று எத்தனை மதங்களிருந்தாலும் அவை ஆண்டவனின் சந்நிதானத்தில்தான் கொண்டு போய் விடுகின்றன,"

மத பீடாதிபதிகள், வழங்கும் பதில் இது! எத்தனை பாதைகளிருப்பினும் அவையெல்லாம் ஈசனின் அடிகளுக்குத்தான் கொண்டு சேர்க்குமாம்!! சரி. ஏற்றுக் கொள்ளுவோம். கனிவும், அன்பும் ததும்ப இதை உபதேசிப்பவர், நேரு சொல்வதுபோல, நடந்துகாட்டுகிறாரா? ஒருபோதும் கிடையாது! உன்னுடையது — என்னுடையது, நீ — நான், நான்-உயர்ந்தவன்நீ தாழ்ந்தவன், என்று அடித்துக்கொள்ளத்தான் செய்கிறார்கள்.

இதற்குக் காரணம் உள்ளம்!—என்கிறார், வினோபா.

உலகப் போர், எங்கே நடக்கிறது? உள்ளத்தில்தான்!!

நான் பேராசைக்காரனைச் சேர்த்து வைக்கிறேன். என் மனதில் எழுந்த பேராசையின் விளைவாக சமூகத்திலே இரண்டாவது பேராசைக்காரன் உற்பத்தியாகிறான்.

எனது உள்ளத்தில் நடக்கும் நன்மை தீமைச் சண்டைகளில் பேராசை பலமுள்ளதானால் எதிரே அது திருடன் உருக் கொண்டு வந்து நிற்கிறது. அந்தத் திருடனிடமிருந்து தப்புவதற்குத் திட்டம் வகுக்கிறேன். போலீஸ், நியாயசபை, நீதிபதி, சிறை ஆகிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்கிறேன். ஆனால் எனது பேராசையைப் போக்குவதற்கு எந்தத் திட்டத்தையும் வகுப்பதில்லை. பேராசை உள்ளவரை அதன் காரணமாகப் போலீசும் சிறைக்கூடமும் திருடர்களும் இருந்துகொண்டுதானிருப்பார்கள்.

உலக யுத்தம் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் நடக்கிறது. ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் நல்லனவும், தீயனவுமான போக்குகள் மோதுகின்றன.

வேற்றுமை என்று ஒன்று இருந்தால்' அது உள்ளத்திலுள்ள நல்ல குணம், கெட்ட குணம் என்பதுதான்.

உள்ளத்தைப் பக்குவப்படுத்திக்கொண்டு, கெட்ட குணத்தைச் சாய்த்துவிட்டால், பேதமும் பிளவும், சாதி சமயச் சழக்குகளும் ஏற்படாதென்பது, வினோபா அடிகளின் கருத்து.

நேரு அவர்களும் இந்த உள்ள உயர்வு வேண்டுமென்று வலியுறுத்துகிறார்.

உள்ளம் பண்பட்டுவிட்டால், மனித இனம் எவ்வளவோ, முன்னேறிவிடும். சாந்தமும் சமாதானமும் தழைக்கும். நீ—நான் என்கிற சண்டையில்லாமல் வாழலாம்.

ஆனால் வழி?

காட்டுகிறார், இராசேந்திர பிரசாத்! இந்தியக் குடியரசுத் தலைவர், நேருவுக்குச் சகா, உலக சமாதானமும் அன்பும் உருவாவதற்குள்ள ஒரே ஒரு வழி "இதுதான்" என்று விளக்கிவிளக்கிச் சொல்லியிருக்கிறார், மத மாநாட்டில்.

அவ்வழி எதுதெரியுமா? மனிதனுக்கு உள்ளத்தில் மத உணர்வு ஏற்பட வேண்டுமாம்! அப்போதுதான், அன்பும் சமாதானமும் ஏற்படுமாம்!!

"விஞ்ஞானம் ஒன்றே போதும் என்று மனிதன் இருக்கமுடியாது. வாழ்க்கையில் ஆத்மீக உணர்ச்சியும் மத நம்பிக்கையும் கொண்டால்தான் இன்பம் பெற இயலும்"

"அழிவுப்பாதைக்கு, ஆராய்ச்சியின் மூலம் செல்லுகிறான் மனிதன். ஆகவே, இத்தீங்கு ஒழிய ஒருவழி கண்டாகவேண்டும்"

"மதம், இன்றியமையாதது மட்டுமல்ல; மனிதனுக்குத் தனிப்பட்ட முறையிலும், சமூகத்துக்கும் மிகமிக அவசியம்"

பிரசாத் வழங்கும் வழி இது! மதம், வேண்டுமாம்!!

மதம், என்றால் எது? அதற்கு சொல்லப்படும் விளக்கம் என்ன? —கேளுங்கள்; சரியான பதிலைப் பெற முடியாது.

நமக்குத் தெரிந்த வரையில், நமது நாடு குட்டிச்சுவராகவும் வேற்றுமைகள் பெருகவும், மூட நம்பிக்கைகள் வளரவும், காரணமாகயிருந்ததும், இப்போதும் இருப்பதும், மதம்தான்.

இதுவா, வளரவேண்டுமென்கிறார், பிரசாத்! கொடும் புலிக்கு உணவூட்டி வளர்த்துவிட்டு, புள்ளிமான்களையும் உலவவிட வேண்டுமென்பது எப்படிச் சாத்யமாகும்? ஒருபோதும், இயலாது.

பிரசாத் போன்றவர்கள், எவ்வளவுதான் பெரிய பீடத்திலிருந்தாலும், இதுபோலப் பேசுவதால் தான் குழப்பம் அதிகமாகிறது— உள்ளம் தெளிவடைவதில்லை.

விஞ்ஞானத்தை விட மதம் தேவையாம்! ஏனெனில், விஞ்ஞானம் வேதனைப் பாதையில் செல்லுகிறதாம்!!

வேதனைப் பாதையில் விஞ்ஞானம் செல்லுகிறதென்பதை, நாமும் மறுக்கவில்லை. அதற்குக் காரணம், நேருவும், வினோபா அடிகளும் சொன்னதுபோல உளமாற்றம் வேண்டும்.

அதற்கான வழியினைத்தான் இயேசு காண எண்ணினார்—நபிகள் முயன்றார்—புத்தர் போதித்தார்—காந்தியடிகளும் ஆசைப்பட்டார், வழி காண.

அந்தவழி,'மத' வழியல்ல,மனித உள்ளம், அன்பாலும், பண்பாலும் செம்மைப்படுகிற வழி. அவ்வழியில் உலகை நடாத்திட ஒவ்வொருவரும் முனைந்தால், "வசுதேவ குடும்பம்" எங்கும் ஏற்படும்.

ஆனால், எங்கே வழியுள்ளது, இன்று! இவ்வளவு அருமையாகப் போதிக்கும் நேரு அவர்களுக்கே, சகிப்புத் தன்மையும், தான் சொன்னதைச் செய்துகாட்டும் வாய்ப்பும் இருக்கிறதா? செய்கிறாரா!!

மத மாநாட்டில் பேசியபோது. "செயல் சரியாகயிருந்தால் போதும், நாம், அன்பையும், சகிப்புத் தன்மையும் காட்டி நடந்தால் போதும். அப்போது உலகமே நம்மைப்பின்பற்றும்," என்றார்.

உலகம் எங்கும் ஓடி ஓடி இதைப் பிரச்சாரம் செய்யவேண்டுமென்கிற அவசியமில்லை! ஏனெனில் பேச்சைவிட செயல்தான் முக்கியம்-காந்தியடிகள் உயிரோடிருந்தபோது, அவசியம் அமெரிக்காவுக்குப் போய் உங்கள் கொள்கைகளைப் பேசுங்கள்—நிறையப் பணமும் கிடைக்கும் — பலனும் ஏற்படும் என்றார்கள். காந்தியடிகள் மறுத்தார். ஏன் தெரியுமா? நல்லதை எங்கிருந்து சொன்னால்தான் என்ன, விமான மேறி ஓடியா சொல்லவேண்டும், என்றார்.

இந்த விபரத்தைக் கூறி, பேச்சு தேவையில்லை! செயல்தான் முக்கியம், என்கிறார்!!

இப்படிப் பேசிய பண்டிதர் அவர்களே, எத்தனை தடவை மேல் நாடுகளுக்கு ஓடுகிறார், என்னென்ன பேசுகிறார் என்று பார்த்தால்,"அவரால்கூட, 'பேச்சையும் செயலை'யும் ஒன்றாக்க முடியாதது, விளங்கும்!!

அவருக்கே, இந்நிலையென்றால்--பழைமைப் பித்துப் பிடித்தோரால், பெற்றுக்கொண்டிருக்கும் இலாபங்களை இழந்து, புது வழி வருவது இலேசில் இயலுமா.

காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ★

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

மெழுகி வருகிறாரோ, அந்தக் குட்டையெல்லாம் உடைக்கும் வகையில் அங்கே பேசினார், டி. டி. கே.

ஐக்கிய நாடுகள் சபையிலும், வெளியிடங்களிலும், வி. கே. கே. மேனன், வெளியிடும் கருத்துக்களும், பேச்சுக்களும், அவரை ஒரு அமெரிக்க விரோதி என்று கருதும்படியிருப்பதாக புகார்கள் கிளம்பியுள்ளன.

ஒரே கட்சி! ஆனால், இரண்டு கருத்துக்கள்!

நேரு, இதனைப் புரியாதவரல்ல, உணராத வருமல்ல. எனினும், தன்னருகிலிருப்பவர்களைக் கண்டித்தால், கட்சியின் மீது மாசு ஏற்படுமே என்று மூடிமறைக்கிறார். ஆனால், கருத்து வேறுபாடுகள், காங்கிரஸ் கட்சிக்குள் எந்தளவுக்கு மோதிக்கொண்டுள்ளன என்பது, இந்நிகழ்ச்சிகளால் விளங்கும்.

முதலாளித்துவமும் பாட்டாளிகளும், புலியும் மானும் ஒன்றாக உலாவும் 'மாடல்' சோலையாகக் காங்கிரஸ் கட்சி விளங்கட்டும்! விளைவையும் அனுபவிக்கட்டும்!!—அதைப்பற்றி நமக்கு அக்கரையில்லை. ஆனால், இவர்கள், ஆளவந்தார்களாகயிருக்கிறார்களே, அவர்களது பிடியில் சிக்கிக்கிடக்கிறோமே நாம், என்பதால்தான் இதுபற்றிச் சிந்திக்க நேருகிறது.

பார்லிமெண்டில் இந்த கிழமை பேசிய முன்னாள் காங்கிரஸ் தலைவர் ஆச்சாரிய கிருபளானிகூட இந்த முரண்பாட்டை எடுத்துக்காட்டியிருக்கிறார். இந்த முரண்பாடுகளால், இப்படிப்பட்டவர்களை அமைச்சர்களாகப் பெற்றிருப்பதால், நாட்டுக்கன்றோ நஷ்டம் என்று காரசாரமாகக் கேட்டிருக்கிறார் — "இதோ, இன்று நிதியமைச்சராகயிருக்கிறாரே டி. டி. கே! இவர், வியாபார மந்திரியாகயிருந்த சமயம், ஒரு நாள் இவரைச் சந்தித்து—'ஐயா! இப்படி, வெளிநாடுகளிலிருந்து ஏராளமான பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதி கொடுக்கிறீர்களே? இது, சரியா! இப்படிச் செய்வதால், பணத்துக்குத் திண்டாடும் நம்முடைய பணம், மென்மேலும் வெளிநாடுகளுக்குச் செல்லத்தானே வழியேற்படுகிறது?'—என்று கேட்டேன். அதற்கு இவர், 'நமது நாடு, ஒரு சுதந்திர நாடு. யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், எங்கிருந்து வேண்டுமானாலும் பொருள்களை வரவழைக்கலாம். அதை எப்படித் தடுக்க முடியும்,?' என்றார். அன்று அப்படி என்னிடம் சொன்ன அதே நபர், இன்று, "வெளிநாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்யக்கூடாது," என்கிறார். அன்று நான் சொன்னபோதே, ஏன் கேட்டிருக்கக்கூடாது?", என்பதாக.

நிரந்தரமான கொள்கை இல்லை, என்பதைத் தானே இது காட்டுகிறது! சங்கடம் வரும்போது, "இங்கு ஓடலாமா! அங்கு ஓடலாமா!", என்று பார்க்கிறார்கள். ஆனால், மீதி சமயத்தில், பாதுஷா தர்பார் நடத்துகிறார்கள். அவரவர்கள் இஷ்டம் போல் கொள்கைகளை, வகுத்துக்கொள்ளுகிறார்கள்.

பணமில்லை! பணமில்லை!! — என்று டில்லி, என்றைய தினம் ஆட்சியில்மர்ந்ததோ, அன்று முதல் கேட்டுவருகிறோம். இருந்தும், டி. டி. கே. வியாபார மந்திரியாகயிருந்தபோது, வெளிநாட்டுக்குப் பணம் போகும் இறக்குமதிகளை அனுமதித்தார். இப்போது, "அதுகூடாது. அதனால், நம்பணம் விரயமாகும்," என்று முழக்குகிறார்.

தெளிவான கருத்து! நல் நெஞ்சம்! ஒரேமாதிரியான கொள்கை!!—இருக்குமாயின், இப்படி, மாதத்துக்கொரு மாறுதல் உண்டாகுமா?

மந்திரிகளாயிருப்போருக்கே; இப்படி சபலமும் ஆசாபாசமும் இருக்கிறதென்றால், நாடு எங்ஙனம் நலம் பெற இயலும்.

இந்தளவு குழப்பம் ஏற்படக் காரணம், ஆட்சியை நடாத்துகிற கட்சியிடம், தெளிவான கொள்கை இப்போது இல்லாததுதான்! சந்தர்ப்பவாதிகளையும், காற்றடிக்கும் திக்கில் திரும்புகிறவர்களையும், ஆளில்லையே என்பதால் நாடுகிறது--அவர்களுக்குப் பொறுப்பான இடங்களையும் அளிக்கிறது. அவர்கள், தத்தமது விருப்பு வெறுப்புப்படி, அரசாங்கக் காரியங்கள் குறித்து, விளக்கம் தருகிறார்கள். விளைவு, ஒரு நாளைக்கு, இந்திய அரசு, 'ருசியாவை மாபாதகநாடு' என்கிறது. இன்னொரு நாளைக்கு இந்திய அரசின் சார்பில் பேசுகிறவர், 'ஆகா! இந்த அமெரிக்காவா?' என்று எரிச்சலைக் கொட்டுகிறார்.

இந்த நிலைமை கண்டு, வெளியுலகம் விலா நோகச் சிரிக்கும்—இப்படி கொள்கையற்ற கோமான்களிடம் சிக்கிச் சிதையும் மக்களைக் கண்டு பரிதாபப்படும். ★

# சட்டசபையில் தி. மு. க.

இந்தத் தடவைக் கூடிய சட்டசபைக் கூட்டம், மக்களாட்சியின் மாண்புக்கும், நல்லதோர் பண்புக்கும் ஒரு சோதனை போன்றதாகும்.

முதுகுளத்தூரில் நடந்த அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகள் பற்றியும், புதிய போலீசு சட்டம். குறித்தும், சபை விவாதித்தது. இந்த இரு பிரச்னைகளும், சாதாரணமானவையல்ல. சட்டசபைக்கு தி. மு. க. புதிதாதலால் என்ன சொல்லப்போகிறது, சறுக்கி விழுமா—சாய்ந்துபோகுமா, என்று எதிர்பார்த்தவர்கள் பலர்.

அவசரத்துக்கு ஆட்படாத தன்மையும், ஆழ்ந்த யோசனையும், மிகமிகத் தேவைப்பட்ட கட்டம், இது.

ஏதாவது ஒருபக்கம் நிற்பதென்பதும், அதற்குப் பிறகு காரண காரியங்களை உருவாக்கிக்கொள்வதும், எளிது.

ஆனால், தி. மு. க. சட்டசபைக்கட்சி, அவ்வழி செல்லவில்லை. பிரச்னையின் ஒவ்வொரு அங்கத்தையும் அலசி ஆய்ந்து, தன் வழி சென்றது. தன்னை மறந்து, மற்றவர்களோடு கூடிடவில்லை. பிரச்னையின் தன்மையையே, முக்கியமாகக் கருதியது.

ஆரவாரத்துக்குள் அகப்படுவதென்பது சகஜம். அந்த அவசரத்துக்கு, தி. மு. க. ஆட்படவில்லை.

மூன்ருவது சக்தி என்பார்களே, அதுபோல, தி. மு. க. சட்டசபைக் கட்சி, இயங்கிற்று.

ஏனையவர்களைவிட, நாட்டு வாழ்விலும், நாட்டின் முன்னுள்ள பிரச்னைகளிலும், தெளிவான கருத்தும், அதையுணர்ந்து நடக்கவேண்டிய கடமையையும், தி. மு. க. நன்ருக உணர்ந்திருக்கிறது. என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

கம்யூனிஸ்டுகளும், அவர்களது நட்புக்குத் தங்களை அர்ப்பணித்தவர்களும், தி. மு. க. தங்களோடு எந்த விஷயமானுலும் சேர்ந்துகொள்ளும் என்றே எண்ணினர்.

தி. மு. க. ஏற்கவில்லை, இதனை.

காங்கிரசையும், அதன் ஆட்சியின் தவறுகளையும் கண்டிக்கத் தவறவில்லை, சிக்கலைவளர்த்துவிட்ட திறமைக் குறைவைச் செப்பிற்று, சபையில். ஆட்சியினரின் தவறுகளை, சுட்டிக்காட்டிற்று. நீதிமன்ற விசாரணை வேண்டும், என்று முழக்கிற்று. ஆதித்திராவிடப் பழங்குடி மக்களுக்குப் போதிய பாதுகாப்பளிக்க சர்க்காரும் காங்கிரசும் தவறிவிட்டது என்பதை உணர்த்திற்று. அதே சமயத்தில், இந்த அலங்கோலத்துக்கு, முதலமைச்சரும், உள்நாட்டு அமைச்சருமே காரணம் என்று பிரித்துச் சொல்லிக் குற்றம் சாட்டிய கம்யூனிஸ்டுகளோடு கரம் கோர்த்துக்கொள்ள மறுத்துவிட்டது.

ஒரு நீதிமன்ற விசாரணை வேண்டும் என்கிற நேர்மையான கோரிக்கைக்கும் அரசினர் செவி சாய்க்க மறுத்ததால், ஆட்சியினரின் பிடிவாதப் போக்கைக் கண்டித்து, 'வாக் அவுட்' செய்து தன் கண்டனத்தையும் காட்டிக் கொண்டது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, வேறு சில விளைவுகளை எதிர்ப்பார்த்தவர்கள், தி. மு. க. வின் தனி வழி கண்டு சலசலப்புற்றனர்.

தி. மு. க. சட்டசபைக்குப் போயிருப்பது மற்றவர்களுடைய ஆசாபாசங்களை நிறைவேற்றுவதற்கல்ல; அவர்கள் ஆசைப்படி நடப்பதற்குமல்ல. தி. மு. க.வுக்கென்று, நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் உண்டு. நிதானமாகவும், நேர்மையோடும், மூன்ருவது சக்தியாக இருந்து பணிபுரியும் பாதை வகுத்துக்கொண்டுவருகிறது தி.மு.க.

எனவேதான், தேசிய கவுரவத்தைக் காப்பதற்கென்று சொல்லி புதியதொரு மசோதாவை போலீசு அமைச்சர் புகுத்தியபோது; தி. க.வுக்கும் தனக்குமிடையே தொடர்பு அற்றிருந்தும்கூட, மசோதாவை எதிர்த்தது; கண்டித்து ஓட்டளித்தது. இந்த மசோதாவால் யாருக்கும் மதிப்பு இல்லை; சிக்கலைத் தீர்க்க முடியாது, வளரும் சூழ்நிலையைப் போக்கும் சரியானமார்க்கமுமல்ல, என்று தி.மு.க. கருதுகிறது. அதுமட்டுமின்றி, இப்படி அடக்குமுறைச் சட்டங்கள் செய்வது, மக்களாட்சியின் முறைக்கு உகந்தது அல்ல; சர்வாதிகாரப்பாதைக்கு வழி வகுப்பதாகும் என்றும் தி.மு.க. எண்ணுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர்த்த ஏனைய கட்சிகள் யாவும் ஒரே அணியில் நின்றுகொண்டன; தனியாக இருந்தும் தி. மு. க. தன் கண்டனக் குரலை எழுப்புவது கண்டு, அவைகள் அதிர்ச்சியுமடைந்தன, எனலாம். தி. மு. க. வின் போக்கு, எரிச்சலைக்கூட, அவர்களுக்குத் தந்திருக்கக்கூடும். எரிச்சல் எப்போதும் நிரந்தரமானதல்ல; சட்ட சபைக்குள்ளும் வெளியிலும் இருக்கும் அரசியல் கட்சிகள், தங்கள் விருப்பு வெறுப்பு ஆகியவைகளை மறந்து, தி. மு. க. மேற்கொண்ட பாதையினைப்பற்றி எண்ணிப் பார்ப்பார்களேயானுல், தி. மு. க. ஒரு மூன்ருவது சக்தியாக உருப்பெறுகிறது என்பதை உணர்ந்துகொள்ளலாம்.

சுலபமான காரியமல்ல, இது. ஆனுல், இப்படியொரு மூன்ருவது சக்தி இருக்கவேண்டும் என்பதை எவரும் மறுக்க முடியாது. தி.மு.க. அந்த இடத்தை நிரப்புகிறது என்பதையும், எவரும் சந்தேகிக்க முடியாது.

★

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.